ஜூன் 2002 www.padippakam.com ரூ. 5.00




# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## உலக ரவுடியின் மிரட்டல்

அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை உருவாக்கும் ஒப்பந்தத்தில் 139 நாடுகள் கையெழுத்திட்டிருப்பதோடு, அந்த ஒப்பந்தத்தை 16 நாடுகளின் நாடாளுமன்றங்கள் அங்கீகரித்தும் உள்ளன. இந்த நீதிமன்றம் ஜூலை 1 முதல் நெதர்லாண்ட் நாட்டிலுள்ள ஹேக் நகரில் செயல்படவுள்ளது. இந்த நீதிமன்றத்தைத் தனது இராணுவ அத்துமீறல்களுக்கும், பயங்கரவாதத்திற்கும் எதிரானதாகப் பார்க்கும் அமெரிக்கா, இந்த நீதிமன்றத்தை ''போக்கிரி நீதிமன்றம்'' எனச் சாடியுள்ளது. யாராவது ஒரு அமெரிக்கனை இந்த நீதிமன்றம் விசாரிக்க முயன்றால், நாங்கள் படையெடுப்போம் என எச்சரித்திருக்கிறது.

## இந்தியா, அமெரிக்காவின் குப்பைத் தொட்டி

தகர்ந்து விழுந்த உலக வர்த்தக மையக் கட்டிடங்களில் இருந்து எடுக்கப்பட்ட பழைய இரும்புக் கம்பிகளை அமெரிக்காவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ளது. ஏற்கனவே 33,000 டன் இரும்புக் கம்பிகள் வந்து இறங்கி விட்டன; இன்னும் 17,000 டன் இரும்புக் கம்பிகள் இறக்குமதியாக வேண்டியுள்ளது. அரைகுறையாகவோ அல்லது முற்றிலுமாகவோ உருகிப் போய் உருமாறிக் கிடக்கும் இந்த பழைய இரும்புக் கம்பிகள் மாசடைந்திருக்கும் என்றும், இந்தக் கம்பிகளைப் பயன்படுத்தி வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உடல் நலக் கேடு ஏற்படும் என்றும் சுற்றுப்புறச் சூழல் அமைப்புகள் எச்சரித்துள்ளன. இதனால் மீதமுள்ள இரும்புக் கம்பிகளை இந்தியாவிற்குள் இறக்க விடாமல் தடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக பல்வேறு தொழிற்சங்கங்களும், மக்கள் திரள் அமைப்புகளும் அறிவித்துள்ளன.

## குஜராத் இனப்படுகொலை: நீதி கிடைக்குமா?

அகமதாபாத் நகருக்கு அருகிலுள்ள சபர்மதி ஆசிரமத்தில் கடந்த மாதம் நடந்த அமைதிக் கூட்டத்தில் புகுந்த போலீசு, பத்திரிகையாளர்களைக் குறிவைத்து விளாசித் தள்ளியது. போலீசின் இந்த அத்துமீறல் குறித்து விசாரணை நடத்திய தாவே கமிசன், ''போலீசார் பத்திரிகையாளர்களைக் குறி வைத்துத் தாக்கவில்லை; அளவுக்கு அதிகமான படைபலத்தைப் பயன்படுத்தவில்லை. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட நர்மதா பாதுகாப்பு இயக்கத் தலைவி மேதா பட்கரைப் பாதுகாக்கும் பொருட்டுதான் போலீசார் தடியடி நடத்தினர்'' என இந்து மதவெறி பிடித்து அலையும் குஜராத் போலீசுக்கு நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறது. இது ஒருபுறமிருக்க, அகதி முகாம்களில் இருந்து கிராமங்களுக்குத் திரும்ப விரும்பும் முசுலீம்கள், ''இந்து மதவெறியர்களுக்கு எதிராகக் கொடுத்த புகாரைத் திரும்பப் பெற வேண்டும்; தாடியை எடுத்து விடவேண்டும்'' என நிர்பந்திக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

## ஊதாரித்தனமே கொள்கை

கஜானா காலி என்று ஒப்பாரி வைக்காத மாநில அரசுகளே கிடையாது; என்றாலும் ஆளும் கும்பலின் ஊதாரித்தனம் இம்மியளவுக்கூடக் குறைந்தபாடில்லை. சமீபத்தில் ஆந்திர மாநில அரசு, தனது அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் அரசின் செலவில் வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் சென்று வர அனுமதியளித்துள்ளது. இதை யாரும் ஊதாரித்தனம் என்று சொல்லிவிடக் கூடாது என்பதற்காக, மேலை நாடுகளில் பொருளாதார சீர்திருத்தம் அமல்படுத்தப்படும் விதத்தைக் கற்று வரத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதாக இதற்கு ஒரு கொள்கை விளக்கம் அளித்திருக்கிறார், சந்திரபாபு நாயுடு. இந்த வெட்டிச் செலவை எதிர்த்துத் தொடுக்கப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்த ஆந்திர உயர் நீதிமன்றம், சட்டமன்றம் எடுக்கும் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிடாது எனத் தீர்ப்பளித்து சந்திரபாபு நாயுவுக்கு ஒத்து ஊதிவிட்டது.

## பொதுத்துறை தொழிலாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை

பொதுத்துறை நிறுவனமாக இருந்து தனியார்மயமான ''பால்கோ'', தனது தொழிலாளர் ஓய்வு பெறும் வயதை அறுபதில் இருந்து ஐம்பத்தெட்டாகக் குறைத்துவிட்டது. இதனால், ஒரே சமயத்தில் 500 பால்கோ தொழிலாளர்களின் வேலை பறிபோகும் அபாயம் நெருங்கி விட்டது. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும்போது, அதை எதிர்க்கும் ஓட்டுக் கட்சிகளின் தொழிற்சங்கங்கள், முடிவில் ''தொழிலாளர்களை வேலையில் இருந்து துரத்தக் கூடாது'' என்ற உத்தரவாதத்தை வாங்கிக் கொண்டு சமரசமாகி விடுகின்றன. பால்கோவை வாங்கிய ''ஸ்டெர்லைட்'' முதலாளிகள், ஓய்வு பெறும் வயதைக் குறைத்ததன் மூலம் அந்த உத்திரவாதத்திற்கு சட்டபூர்வமாகவே வேட்டு வைத்து விட்டனர்.

**ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பில் புகுந்து கலகம் செய்யும் சி.பி.ஐ. கட்சியின் இளைஞர் அணியினர்.**
**(நன்றி: நக்கீரன்)**





## பா.ஜ.க.-காங்கிரசின் கள்ள உறவு

சமஸ்கிருத பாரதி என்ற இந்து மதவெறி அமைப்பு பாண்டிச்சேரியில் சமஸ்கிருத மொழி பயிற்சி வகுப்பு என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பை நடத்தியது. ஆர்.எஸ்.எஸ். பயிற்சி வகுப்பு என்றாலே அதில் ஆயுதப் பயிற்சியும் சொல்லித் தரப்படும். பாண்டிச்சேரியில் இந்தப் பயிற்சி வகுப்பு நடந்த இடம் பிள்ளைவாடி அரசு பொறியியல் கல்லூரி. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இளைஞர் அணியினர் இப்பயிற்சி வகுப்பினுள் நுழைந்து, கலகம் செய்து, வகுப்பு தொடர்ந்து விடாதபடி தடுத்து விட்டனர். கலகம் செய்தவர்களை மைய அரசின் உத்தரவுப்படி பிணையில் வெளிவர முடியாத வழக்கில் உள்ளே தள்ளியதோடு, இக்கைதைக் கண்டித்து ஊர்வலம் நடத்த முயன்ற சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளுக்கு அனுமதியும் மறுத்து விட்டது, பாண்டிச்சேரியை ஆளும் 'மதச்சார்பற்ற' காங்கிரசு கட்சி!


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 17

இதழ் 8

ஜூன் 2002

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அஞ்சல் பெட்டி எண். 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# புலிகளின் இன விடுதலை துரோகம் ஈழம் மறுகாலனியாகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி - தலைவர் பிரபாகரனை ஆட்கொணர்வு செய்யும் தீர்மானத்தைத் தமிழக மற்றும் புதுவை சட்டப் பேரவைகள் நிறைவேற்றியுள் ளன. இதில் ஜெயலலிதா, சோ, சுப்பிரமணிய சுவாமி மற்றும் இந்து நாளேடு போன்ற பார்ப்பன - பாசிச - பயங்கரவாத சக்திகள் அதீத அக்கறை காட்டுகின்றன.

பிளவுவாத, தீவிரவாத, பயங்கரவாத பீதி கிளப்பி அரசியல் ஆதாயம் தேடுவது பார்ப்பன - பனியா கும்பல்களின் அரசியல் உத்தியாக உள்ளது என்பதை மிகச் சரியா கவும், தெளிவாகவும் இனங்காட்டியிருக்கும் நமக்கு, இந்தத் தீர்மானம் வியப்பை ஏற்ப டுத்தவில்லை. இது தவிர வேறு எதற்கும் இத்தீர்மானம் பயன்படாது. சுமார் இருபது ஆண்டு காலம் பிரபாகரனைப் பிடிப்பதற்கோ, கொல்வதற்கோ முயன்று தோற்றுப் போயின இலங்கை அரசும் இராணுவமும். அதே முயற்சியில் நவீன ஆயுதங்களுடன் இலட்சம் பேர் அடங்கிய இராணுவத்தை ஏவியது இந்திய அரசு. அது வெட்கக்கேடான தோல்வியைத் தழுவித் திரும்பியது.

ஈழப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கான இலங்கை அரசின் முயற்சி ஒரு போதும் நிறைவேறாது என்ற நிலையில், போர் நிறுத்தம் - பேச்சு வார்த்தை என இறங்கி யுள்ளது. இப்போது பிரபாகரனைக் கைது செய்து இந்தியா அனுப்பும்படி கோருவதும், இல்லையானால் இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாகரனைப் பிடித்துவரும்படிக் கோருவதும் பைத்தியக்காரத்தனம் என்பது ஜெயலலிதா, சோ, சு.சுவாமி மற்றும் அவர் களின் அடிவருடி வாழப்பாடி போன்றவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

பிரபாகரனைப் பிடித்துவரக் கோரும் தீர்மானத்துக்கு விடுதலைப் புலிகளின் தீவிர விசுவாசிகளான நெடுமாறன், வைகோ, இராமதாசு முதல் புலிகளின் எதிர்ப்பாளர்களான போலி கம்யூனிஸ்டுகள் வரை பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்த எதிர்ப்பு இரண்டு வகையானதாக உள்ளது. பா.ஜ.க., போலி கம்யூனிஸ்டுகள் ஆகியோர் ராஜீவ் கொலை வழக்குக்காக பிரபாகரன் சட்டப்படி தண்டிக்கப்பட வேண்டும்; ஆனால், ஒரு அந்நிய - அண்டை நாட்டுக்கு இந்திய இராணுவத்தை அனுப்பக் கூடாது என்பதற்காக மட்டும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அனைவரும் இத்தீர்மானத்தை அடியோடு எதிர்க்கின்றனர். ''ஈழத் தமிழர்களுக்குத் துரோகம்; தீர்மானம் நிறைவேறிய நாள் துக்க நாள்'' என்று வைகோ அறிவித்திருக்கிறார். தீர்மானம் நிறைவேறிய நாளன்று கருப்புச் சட்டை அணிந்து சட்டப்பேரவைக்குப் போன பா.ம.க. உறுப்பினர்கள், ''அமைதிப் பேச்சைக் கெடுக்காதே'', ''ஈழத் தமிழரை வஞ்சிக்காதே'' என்று முழங்கிக் கொண்டே வெளிநடப்புச் செய்துள்ளனர். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் என்கிற பெயரில் நெடு மாறன் தலைமையில் கூடிய சில அமைப்புகளும் தனிநபர்களும் பிரபாகரனை ஆட்கொ ணர்வு செய்யக் கோரும் தமிழக சட்டப்பேரவைத் தீர்மான நகல் எரிப்புப் ''போர்'' நடத் தினார்கள். (இதில் ஒரு சிறு குழப்பம். ஈழ விடுதலைப் புலிகள் ஏ.கே. 47, கண்ணிவெடி, ஏவுகணை, பீரங்கி போன்றவற்றை வைத்து நடத்துவதும் போர்; காகித எரிப்பும் போர் என்கிறார்கள் நெடுமாறன் வகையறாக்கள் .)

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ராஜீவ் கொலைக் குற்ற வாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா ஆகியோரை இந்தியா கொண்டு வந்து தண்டிக்க வேண்டும் என்ற அக்கறையை இந்திய, தமிழக ஆளும், ஆண்ட கட்சிகள் எவையும் இதுவரை காட்டவில்லை. அதற்கு மாறாக, ராஜீவ் கொலையை வைத்து அரசியல் ஆதாயம் தேடிக் கொள்வதில்தான் அவை முனைப்புக் காட்டின. இதனால் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை, விசாரணைக் கமிசன்கள் எல்லாமே மர்மமாகவும், நியாயத்துக்குப் புறம்பாகவும், கேலிக்கூத்தாகவும் இதுவரை நடத்து வருகின்றன.

இதுமட்டுமல்ல; ராஜீவ் கொலை மீது அதற்கான காரணகாரியங்கள், பின்னணி உட்பட விசாரிக்கப்பட்டால், ராஜீவ் உட்பட இந்திய அதிகார வர்க்கத்தினர், இராணுவத் தினர் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்திய போர்க் குற்றங்களும் அம்பலத்துக்கு வந்து விடும் என்று அ.இ.அ.தி.மு.க. உட்பட ''அனைத்திந்திய தேசியக் கட்சிகள்'' எல்லாமே அஞ்சுகின்றன. இதற்கும் மேலாக ராஜீவ் கொலையை சாக்கு வைத்து அரசியல் ஆதாயம் அடைந்து, ஈழத் தமிழர்களை நரவேட்டையாடிய ஜெயலலிதா போன்றவர்களை இன்னொரு பயபீதி ஆட்டிப் படைக்கிறது.

ஒருவேளை இலங்கை அரசு - விடுதலைப் புலிகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தைகளில் ஏதாவது உடன்பாடு ஏற்பட்டு, சர்வதேச அங்கீகாரத்துடனும் சட்டப்

**தொடர்ச்சி 24-ஆம் பக்கம்**

www.padippakam.com

# பா.ஜ.க.வின் பாசிசத் திணிப்பு பக்க மேளமாக எதிர்த்தரப்பு

''குஜராத்தில் நடந்து வரும் முசுலீம் படுகொலையைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தின் தோல்வி; இந்து மதவெறி - மராட்டிய இனவெறி பாசிசக் கட்சியான சிவசேனாவைச் சேர்ந்த மனோகர் கஜனன் ஜோஷி எந்தவித எதிர்ப்பும் இன்றி நாடாளுமன்ற சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது; ''பொடா'' சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேறிய விதம் - இவையனைத்தும் இரண்டு விசயங்களைத் தெளிவாக்கி விட்டன. ஒன்று, இந்து மதவெறி பாசிஸ்டுகள் தொடுத்து வரும் தாக்குதல்களுக்கு நாடாளுமன்ற ஜனநாயகம் தடையாக இல்லை என்பதோடு, அதுவே இந்து மதவெறி பாசிசக் கும்பலுக்கு ஆயுதமாகப் பயன்படுகிறது; காங்கிரசு, சி.பி.ஐ., சி.பி.எம்., சமாஜ்வாதி ஆகிய மதச்சார்பற்ற எதிர்க் கட்சிகள், இந்து மதவெறி பாசிசக் கும்பலுக்கு எதிராக ஏவும் சட்டவாத எதிர்ப்புகள் பெயரளவிற்கானவை என்பதோடு, சந்தர்ப்பவாதமும், சமரசமும் நிறைந்தவை என்பது மற்றொன்று.

இரண்டாம் உலகப் போரின் பொழுது இட்லரின் நாஜிகள் யூத மக்களை அழித்தொழித்ததற்கும், இந்து மதவெறி பாசிஸ்டுகள் குஜராத்தில் முசுலீம் மக்களைக் கொன்றொழித்து வருவதற்கும் இடையில் எண்ணிக்கையில் வேறுபாடு இருக்கலாமேயொழிய, இரண்டும் அடிப்படையில் ஒன்றுதான். இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்ட நாஜி பாசிஸ்டுகளைத் தண்டிக்க நூரம்பர்க்கில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஆனால், இந்து மதவாதத்தை எதிர்ப்பதாகக் கூறும் காங்கிரசு, சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளுக்கோ, ''குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைப் பதவியில் இருந்து நீக்கு'' என்பதற்கு மேல் கேட்கத் துணிவில்லை.

எதிர்த்தரப்பு இந்தக் கோரிக்கையோடு, பா.ஜ.க.வுடன் மோதத் தேர்ந்தெடுத்த இடம் குஜராத் அல்ல; பாதுகாப்பான நாடாளுமன்றக் கட்டிடம். ''குஜராத் பற்றி விவாதம் நடத்த வேண்டும்; மோடியை மாற்ற வேண்டும்'' என்ற கோரிக்கைகளோடு கீழவையில் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்த எதிர்த்தரப்பு, அத்தீர்மானத்தை அவை விதி எண் 184-இன் கீழ் விவாதிக்க வேண்டும் என்று கோரின. ஆனால், பா.ஜ.க. கூட்டணி அரசோ இக்கண்டனத் தீர்மானத்தை அவை விதி எண் 193-இன் கீழ் விவாதிக்கலாம் என முன் வந்தது.

இந்த இரண்டு விதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? 184 விதியின் கீழ் விவாதித்தால் விவாதத்தின் பின் ஓட்டெடுப்பு நடத்த முடியும்; 193-இன் கீழ் விவாதத்தின் பின் ஓட்டெடுப்பு நடத்த முடியாது. குஜராத் பிரச்சினையை விட, எந்த விதியின் கீழ் குஜராத் பிரச்சினையை விவாதிப்பது என்ற பிரச்சினை பெரிதாகி விட, துணை சபாநாயகர் தலையிட்டு, விதி எண் 184-இன் கீழ் விவாதம் நடக்கும் என உத்தரவிட்டார். ஏப்ரல் 30 அன்று நாடாளுமன்றத்தின் கீழவையில் 17 மணிநேரம் விவாதம் நடந்த பின், எதிர்தரப்பு கொண்டு வந்த கண்டனத் தீர்மானம் ஓட்டெடுப்பில் தோல்வியைத் தழுவியது.

கண்டனத் தீர்மானம் வெற்றியடைந்திருந்தால் என்ன நடந்திருக்கும்! நாடாளுமன்றத்தின் கீழவையில் மோடி அரசின் மீது ஒரு கண்டனத் தீர்மானம் பதிவாகி, நாடாளுமன்றத்தில் குவிந்து கிடக்கும் காகிதக் குப்பைகளோடு குப்பையாகக் கலந்திருக்கும். அதற்கு மேல் மோடியின் ஒரு மயிரைக் கூட எதிர்த்தரப்பினர் பிடுங்கியிருக்க முடியாது. 184-இன் கீழ் நடந்த இந்த விவாதம், குஜராத் படுகொலைகளை விசாரிக்க விசாரணைக் கமிசன் அமைக்கக் கோருவதை விடக் கேவலமானது; மோசடித்தனமானது; சமரசமிக்கது. ஆனால், எதிர்த்தரப்போ இந்த விதியையே இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரான வலுவான ஆயுதமாகக் காட்டி ஊரை ஏய்த்தார்கள்.

184-ஆ? 193-ஆ? என்ற இழுபறி நீடித்துக் கொண்டிருந்த பொழுது, ''கண்டனத் தீர்மானத்தை 184-விதியின் கீழ் விவாதிக்காவிட்டால், கீழவையில் எந்த அலுவலும் நடைபெறாது'' என எதிர்தரப்பு இந்து மதவெறிக் கூட்டணி அரசை மிரட்டியது. எதிர்தரப்பு இப்படி மிரட்டல் விட்டபொழுது, மைய அரசின் 2002-ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு அறிக்கை நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறக் காத்துக் கிடந்தது. குஜராத்தில் முசுலீம் மக்கள் மீது ஏவிவிடப்பட்டுள்ள இனப்படுகொலை பற்றி விவாதித்தால் போதும், இந்து மதவெறிக் கூட்டணி அரசு இந்திய மக்களின் மீது பட்ஜெட் தாக்குதலை நடத்தத் தடையேதும் கிடையாது என்பது தான் எதிர்த்தரப்பின் மிரட்டல். இந்த மிரட்டலை உடைத்துச் சொன்னால், அது ஒரு கீழ்த்தரமான சமரச பேரம்.

குஜராத் பிரச்சினையை 184 விதியின் கீழ் விவாதித்து ஓட்டெடுப்பு நடத்தக் கோரி எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தை ஸ்தம்

குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் சோனியா தலைமையில் நடந்த அமைதிப் பேரணி: என்னே காங்கிரசின் அரசியல் துணிவு!





படிப்பகம்

பிக்க வைத்த அதே பொழுதில் கூட, நரேந்திர மோடி முசுலீம் இனப் படு கொலைகளை நிறுத் தாமல் குஜராத்தை ஸ்தம்பிக்க வைத்துக் கொண்டிருந்தார்.

குஜராத் தலை நகர் அகமதாபாத்தில் சோனியாகாந்தி அமைதிப் பேரணி நடத்தினால், இந்து மதவெறி பாசிஸ்டு களும் ஜார்ஜ் பெர்ணாண்டசு தலை மையில் அமைதிப் பேரணி நடத்தி மதச்சார்பற்ற எதிர்தரப்பை நக்கலடித்தார்கள்.



**குஜராத்தில் முசுலீம்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தில்லியில் ஊர்வலம் நடத்திய மக்கள் முன்னணி தலைவர்கள்.**

ஜோதிபாசு தலைமையில் உள்ள மக்கள் முன்னணி குஜராத்துக்கு உண்மை கண்டறியும் குழுவை அனுப்பினால், இந்து மதவெறி பாசிஸ்டுகளும், தங்கள் பங்குக்கு, தங்களின் கூட்டணிக் கட்சிகளை அனுப்பி பதிலடி கொடுத்தார்கள்.

குஜராத் பிரச்சினையை நாடாளுமன் றத்தில் 184 விதியின் கீழ் விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் அடம் பிடித்தால், நாங்கள் மே. வங்கம், பீகார் மாநில பிரச்சினைகளை இதே விதியின் கீழ் விவாதிக்கக் கோருவோம் என எச்சரித் தார்கள். எந்தெந்த சட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தி இந்து மதவெறி பாசிஸ்டு களை எதிர்தரப்பு அம்பலப்படுத்த முயன் றதோ, அதே சட்ட வாய்ப்புகளைப் பயன் படுத்திக் கொண்டு, எதிர்தரப்பைத் திக்கு முக்காட வைத்தது பா.ஜ.க.

குஜராத்தில் இந்து மதவெறியர்கள் நடத்திய படுகொலைகளைக் கண்டித்த 'தேசிய' பத்திரிகைகளும், நடுநிலையான 'தேசிய'வாதிகளும் கூட, இந்தப் பிரச்சி னைக்காக நாடாளுமன்றம் ஸ்தம்பித்து நிற்பதை விரும்பவில்லை. ரோம் நகரம் தீப்பற்றி எரிந்த பொழுது நீரோ மன்னன் பிடில் வாசித்ததைப் போல, நாடாளு மன்றம் நடந்து கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். இதை வெளிப்படையாகச் சொல்ல முடியுமா? அதனால் அவர்கள் நாடா ளுமன்றத்தில் நடந்து வந்த இழுப றியை ''மக்களின் வரிப்பணம் பாழ்'' என நயவஞ்சகமாகத் தாக்கினார்கள். காற்று எதிர்ப்பக்கம் திசை மாறி வீசிவி டுமோ எனப் பயந்துபோன சோனியா காந்தி, பிரதமர் வாஜ்பாயியுடன் சம ரசம் பேசத் தொடங்கினார்.

''நாங்கள் கண்டனத் தீர்மானத்தின் வார்த்தைகளை மாற்றிக் கொள் கிறோம்; நீங்கள் 184 விதியின் கீழ் விவாதம் நடத்தி ஓட்டெடுப்பு நடத்த ஒப்புக் கொள்ளுங்கள்'' என்றார் சோனியா. இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிராக எதிர்த்தரப்பு கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தின் வார்த்தைகள் முனை மழுங் கிய கத்தி; அதற்குப் பதிலாக அட்டை கத்தியை வைத்துக் கொள்கிறோம் என்ப துதான் சோனியாவின் சமரசம்.

நாடகத்தில் நடிக்கும் நடிகர்கள் வச னத்தை மறந்து விட்டால், அதை எடுத்துக் கொடுத்து நினைவூட்ட, திரையின் பின்னே மறைவாக ''ப்ராம்ப்டர்'' என்று ஒருவர் இருப்பார். இந்தக் கண்டனத் தீர்மானப் பிரச்சினையில், சி.பி.எம். அந்தப் பாத்தி ரத்தை எடுத்துக் கொண்டது. வாஜ்பா யியைச் சந்தித்து சமரசம் பேசி விட்டு வந்த சோனியாவைச் சந்தித்த சி.பி.எம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சோம்நாத் சட்டர்ஜி, ''இன்னும் இறங்கிப் போனால் நமது மதச்சார்பின்மை என்னா வது!'' என நினைவூட்ட, சோனியா மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டார். ''மோடியை நீக்கு'' என்று கோரிய எதிர்க்கட்சிகளின் ஆவேசம், ''மோடியை நீக்க வேண்டும் என்று சொல்ல வாவது எங்களை அனுமதிக்க வேண்டும்'' என்ற அனுதாபத்தில் முடிந்தது.

எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தின் மீது ஏப்ரல் 30 அன்று நாடாளு மன்றக் கீழவையில் விவாதம் நடந்த பொழுது, எதிர்த்த ரப்பின் நிலை பரிதா பகரமாக இருந்தது. ''கண்டனத் தீர்மா னத்தின் வாசகங் களை மாற்றக் கூடாது'' என சோனி யாவை உசுப்பேற்றி விட்ட சோம்நாத் சட்டர்ஜி, ''குஜ ராத்தில் அரசின் ஆத ரவோடு இனப்படு கொலையை நடத்தி யவர்கள் தண்ட னையில் இருந்து தப்பித்து விட முடியுமா என்பதல்ல பிரச்சினை என தட்டைத் திருப்பிப் போட்டு தட்டிவிட்டு ''சிறுபான் மையினர் இந்த நாட்டில் கௌரவத்து டனும், பாதுகாப்போடும் வாழ முடியுமா, இல்லை, பெரும்பான்மை சமூகத்தின் விருப்பப்படிதான் அவர்கள் வாழ வேண்டுமா என்பதுதான் பிரச்சினை'' என்று வெங்காயத்தை உரித்த கதையாகக் கேள்விகளை எழுப்பினார்.

சோனியாவோ, ''மத நம்பிக்கைகள், கட்சி பிடிப்பு இவற்றையெல்லாம் கடந்து செயல்பட, தங்களின் உயர்ந்த உள்ளு ணர்வைத் தூண்டி விடுங்கள்'' என வாஜ்பா யியின் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.


'கவிதை மனமும் உயர்ந்த உள்ளமும்' கொண்ட வாஜ்பாயி, ''நாங்கள் கூட மோடியை மாற்றலாமா என யோசித்தோம்; ஆனால், மோடியை மாற்றினால் நிலைமை மோசமாகும் என்பதால் அந்த யோச னையைக் கைவிட்டு விட்டோம்'' என நியா யவானைப் போல பதில் கொடுத்தார். இந்தப் பதிலுக்குப் பின்னால் இருக்கும் பாசிசத் திமிர் இதுதான்: ''2000 முசுலீம் களை எரித்துக் கொன்று விட்டோம்; ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக முசுலீம்களை அகதிகளாகத் துரத்தியடித்து விட்டோம்; அவர்களின் 3000 கோடி ரூபாய் பெறு மான சொத்துக்களைச் சூறையாடிக் கொளுத்தி விட்டோம். இதுவே போதும்; அதனால் மோடியை மாற்ற வில்லை.''

**''2000 முசுலீம்களை எரித்துக் கொன்றுவிட்டோம்; ஒரு இலட்சத்துக்கும் அதிகமான முசுலீம்களை அகதிகளாகத் துரத்தியடித்து விட்டோம்; இதுவே போதும். அதனால் மோடியை மாற்றவில்லை'' என்பதுதான் எதிர்த்தரப்புக்கு பா.ஜ.க.வின் பதில்.**

வாஜ்பாயி இலை மறைவு காயாக வெளிப்படுத்திய பாசிசத் திமிரை, இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அதி காரப்பூர்வத் தரகனாகச் செயல்பட்டு வரும் ஜார்ஜ் பெர்ணான்டசு, ''கடந்த ஐம்பது ஆண்டுகளில் நாட்டில் நடந்தி ருக்கும் கலவரங்களில், எந்த கலவரத் தில்தான் பெண்கள் கற்பழிக்கப்பட வில்லை? அப்பாவிகள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட வில்லை? குஜராத்தில் என்ன புதிதாக

www.padippakam.com

நடந்து விட்டது?'' என்று வெளிப்படையாகவே கக்கினார். பதவிக்காக இந்து மதவெறி பாசிஸ்டுகளின் காலை நக்கிக் கொண்டிருக்கும் வை.கோ, காங்கிரசு ஆட்சியில் அசாம் மாநிலத்தில் நடந்த நெல்லி முசுலீம் படுகொலைகளையும், தில்லி சீக்கியப் படுகொலைகளையும் காட்டி குஜராத் படுகொலைகளை நியாயப்படுத்தினார்.



இந்து மதவெறி பாசிஸ்டுகளின் அடியாள் ஜார்ஜ் பெர்ணாண்டசு தலைமையில் குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் நடந்த அமைதிப் பேரணி: எதிர்த்தரப்புக்குப் பதிலடி.

இந்து மதவெறி பாசிச பாதந்தாங்கிகளான இந்த இருவரையும்தான் சிங்கள இனவெறி பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களின் காவலர்களாகத் தமிழினக் குழுக்கள் வெட்கமில்லாமல் தூக்கிக் கொண்டு திரிகின்றன.

***

குஜராத் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்தின் கீழவையில் நடந்த விவாதத்தில் எதிர்த்தரப்பின் கோழைத்தனமும், கையாலாகாத்தனமும் வெளிப்பட்டதென்றால், மேலவையில் எதிர்த்தரப்பின் பட்டவர்த்தனமான சமரசமும், துரோகமும் வெளிப்பட்டது. எதிர்க்கட்சிகள் மேலவையில் கொண்டு வந்த தீர்மானத்தில், மோடியை நீக்கு என்பதைக் கூட கை கழுவிவிட்டு, ''குஜராத் சம்பவம் மிகுந்த மன வருத்தத்தை அளிப்பதாகவும், மைய அரசு அரசியல் சாசனப் பிரிவு 355-ஐப் பயன்படுத்தி குஜராத்தில் தலையிட வேண்டும்'' என்றும் வேண்டிக் கொண்டன.

இது போதாதா இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு? ''நாங்களும் கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்கிறோம்'' எனக் கூறி அவர்கள் எதிர்க்கட்சிகளை திக்கு முக்காட வைத்தனர். குஜராத்தில் இனப்படுகொலை நடத்திவரும் இந்து மதவெறி பாசிஸ்டுகளும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கூறும் மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளும் ஒன்றாக கை கோர்த்துக் கொண்டு, கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிய அரிய கேலிக்கூத்து மேலவையில் நடந்தது.

''நகராட்சி, வேலை வாய்ப்பு அலுவலகம், வணிகவரி அலுவலகம், வாக்காளர் பட்டியல் போன்ற அரசு ஆவணங்களில் இருந்து முசுலீம்கள் பற்றிய விவரங்களை இந்து பாசிஸ்டுகள் திரட்டியிருக்கிறார்கள். இது மாநில போலீசுக்கு மட்டுமல்ல; மத்திய உளவுத் துறைக்கும், அதன் மூலம் மத்திய உள்துறைச் செயலருக்கும் தெரிந்திருக்கும்'' எனக் குற்றஞ் சாட்டுகிறார் ராஜா மேனன் என்ற முன்னாள் கடற்படை அதிகாரி. ஆனால், மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகளோ குஜராத் இனப்படுகொலையில் மத்திய அரசின் கூட்டுக் களவாணித்தனத்தை அம்பலப்படுத்தாமல், இந்து மதவெறி மைய அரசை குஜராத் முசுலீம்களின் காப்பாளராகப் போகும்படி தீர்மானம் போடுகிறார்கள். இதன் மூலம் வாஜ்பாயி - அத்வானி தலைமையில் உள்ள கூட்டணி அரசை, இந்து மதவெறி பாசிசப் போக்கு இல்லாத நடுநிலையான அரசாகக் காட்டி, மக்களை ஏய்க்கிறார்கள்.

''கோத்ரா சம்பவத்தை மதச்சார்பற்ற எதிர்க்கட்சிகள் கண்டித்திருந்தால், குஜராத் சம்பவமே நடந்திருக்காது'' என வாஜ்பாயி கூறி, 'மதச்சார்பற்ற' எதிர்க்கட்சிகளை இந்து மத விரோதிகளாகக் காட்ட முயன்றார். அந்தச் சமயத்தில் சோனியா, ''கோத்ராவில் அப்பாவி இராம பக்தர்கள் எரித்துக் கொல்லப்பட்டதை உங்களுக்கு முன் கண்டித்தது நான்தான்'' எனக் கூறித் தன்னைத் தற்காத்துக் கொண்டார். சி.பி.எம். கட்சியோ, ''கோத்ரா சம்பவம் நாடெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது'' என அறிக்கை விட்டு, இந்து மதவெறியர்களுக்கு ஒத்து ஊதினார்கள். இப்படி எதிர்த்தரப்பின் மதச்சார்பின்மை என்பது இந்து மதவெறியர்களின் தாக்குதலின் முன்பு கிழிந்து கந்தலாகிப் போனது!

அமைதிப் பேரணி, மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு தினம் என்ற உப்பு சப்பில்லாத அரசியல் முழக்கங்களை முன் வைத்து இந்து மதவெறியர்களை எதிர்ப்பதாக பம்மாத்து செய்யும் சி.பி.எம்.; குஜராத்தில் அமைதி திரும்ப கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ''கலவரப் பகுதிகளாக'' (Disturbed areas) அறிவித்து, இராணுவத்திடம் கொடுத்து விட வேண்டும் என்று அறிக்கை விடுகிறது. இது அரசு பயங்கரவாதத்திற்கு வால் பிடிக்கும் சி.பி.எம்.-இன் அரசியலில் அரை வேக்காட்டுத்தனத்தைத் தான் காட்டுகிறது.

சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து மதவெறி பாசிஸ்டு மனோகர் ஜோஷிக்கு (நடுவில்) வாழ்த்துத் தெரிவிக்கும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த துணை சபாநாயகர் பி.எம். சயீத் (இடது).



***

இந்து மதவெறி பாசிஸ்டுகள் அரசு இயந்திரத்தை பாசிசமயமாக்க எடுத்து வரும் ஒவ்வொரு நடவடிக்கையையும் - கல்வித் திட்டத்தை காவிமயமாக்கியது தொடங்கி பொடா சட்டம் நிறைவேறியது வரை - காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் சட்டவாதத்திற்குள் புகுந்து கொண்டு சம்பிரதாயமாக எதிர்ப்பதும், பின்பு சமரசமாகிப் போவதும்தான் நடந்து வருகிறது.

நாடாளுமன்றத்தில் அரசு



படிப்பகம்

www.padippakam.com

பயங்கரவாதச் சட்டமான ''பொடா'' நிறைவேறிய பின், ''அச்சட்டத்தை நாங்கள் ஆளும் மாநிலங்களில் பயன்படுத்த மாட்டோம்'' என்று அறிவித்தது சி.பி.எம். காங்கிரசு ஆளும் மாநிலங்களுக்கும் இந்த வேண்டுகோளை விடுத்தது. ஆமை, எதிரியிடமிருந்து தப்பிக்க ஓட்டுக்குள் முடங்கிக் கொள்வது போன்ற இந்தக் கையாலாகாத தற்காப்பை சி.பி.எம். ''மாநில அரசின் உரிமை'' என்று பீற்றிக் கொள்கிறது.

போலி கம்யூனிஸ்டுகள் இந்து மதவெறி பாசிஸ்டுகளை முறியடிக்க மக்களை அணிதிரட்டும் அரசியல் முன்முயற்சியைக் கை கழுவிவிட்டு, காங்கிரசுக்கு வால் பிடிப்பதும், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள மதச் சார்பற்ற கட்சிகளுக்கு வலை விரிப்பதுமான தரகு வேலையைத்தான் செய்து வருகின்றனர்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் எண்ணிக்கை விளையாட்டின் மூலமோ அல்லது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் புனிதமான சட்டங்களைக் காட்டியோ இந்து மதவெறி பாசிஸ்டுகளை அடக்கி விடலாம் என்று காங்கிரசும் போலி கம்யூனிஸ்டுகளும் மனப்பால் குடிக்கின்றனர். ஆனால், இந்து மதவெறி பாசிஸ்டுகளோ, இந்திய நாடாளுமன்றத்தை இன்னொரு ''மூன்றாவது ரெய்ச்சாக'' (இட்லரின் தலைமையில் இருந்த ஜெர்மன் நாடாளுமன்றம்) மாற்ற முயலுகிறார்கள். அதன் வெளிப்பாடுதான் சிவசேனாவைச் சேர்ந்த மனோகர் ஜோஷி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது.

குஜராத் கலவரத்தின் முன்னோடியான மும்பய்க் கலவரத்தைத் தலைமை தாங்கி நடத்திய கட்சி சிவசேனா. மனோகர் ஜோஷி மகாராஷ்டிரா முதல்வராக இருந்த பொழுது, மும்பய் கலவரத்தை விசாரித்து வந்த சிறீகிருஷ்ணா கமிசனைக் கலைத்த 'பெருமைக்குரியவர்'. நாடாளுமன்ற ஜனநாயகம் நமது நாட்டிற்கு தேவையில்லாத ஒன்று என வெளிப்படையாக சர்வாதிகாரத்திற்கு வக்காலத்து வாங்கும் பால் தாக்கரேயின் சீடர், நாடாளுமன்றத்தை வழிநடத்திச் செல்லும் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நகைக்கத்தக்க முரண்பாடு.

காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் ஜோஷி சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பற்றி முகம் சுளிப்பதாகக் காட்டிக் கொண்டாலும் அவரை எதிர்த்து வேட்பாளரை நிறுத்தவில்லை. ஜோஷி, பா.ஜ.க.வை எதிர்க்கும் மதச்சார்பற்ற கட்சிகளின் ஒத்துழைப்போடும்தான் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ''ஆளுங்கட்சி நிறுத்தும் வேட்பாளரை சபாநாயகராக்குவதுதான் நாடாளுமன்ற மரபு'' என்று கூறி அந்தக் கட்சிகள் தங்களின் சமரசத்தை நியாயப்படுத்துகின்றன.

ஜெர்மனியில் நாஜிக்களின் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்த பொழுது, ஜெர்மன் சமூக - ஜனநாயகவாதிகள், ''ஜெர்மன் முன்னேறிய ஜனநாயக நாடு; அது பாசிசத்தை அனுமதிக்காது'' என்று கண்ணை மூடிக் கொண்டு இறுமாந்து இருந்தார்கள். அது மட்டுமின்றி, பாசிசம் குறித்து ஆய்வு செய்துள்ள தோழர் ஜார்ஜ் டிமிட்ரோவ், பாசிசம் அதிகாரத்தைப் பிடித்து விடுவதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக, சமூக ஜனநாயகக் கட்சிகளின் தலைவர்கள் முதலாளி வர்க்கத்துடன் சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்ததைக் குறிப்பிடுகிறார்.

ஜெர்மனியில் இட்லர்; இந்தியாவில் இந்து மதவெறி பாசிஸ்டுகள். அங்கே, சமூக ஜனநாயகக் கட்சிகள்; இங்கே, சி.பி.ஐ., சி.பி.எம் ஆகிய போலி கம்யூனிஸ்டுகள். மேலும், இவை இந்து மதவெறி பாசிசத்திற்கு மாற்றாக, மற்றொரு பாசிசக் கட்சியான காங்கிரசை முன் தள்ளுவது இன்னும் அபாயகரமானது!

● செல்வம்

# பேட்டை ரவுடியாக உடுமலை போலீசு

உடுமலை மைய பேருந்து நிலையத்தில் பார்பி, முறுக்கு விற்க காண்ட்ராக்ட் எடுத்துள்ள முத்துச்சாமி, அங்கு தள்ளு வண்டியில் பழம் விற்க வந்தவர்களிடம் தலைக்கு பத்து ரூபாய் மாமூல் கேட்டுள்ளார். 'நடமாடும் பழ வியாபாரிகள் பொது நல சங்க' உறுப்பினர்களான அவர்கள் மாமூல் தர மறுத்தனர். இதனால் ஆத்திரமாகிப் போன முத்துச்சாமி போலீசிடம் போய் பத்த வைத்து, தள்ளு வண்டி வியாபாரிகளைக் கவனிக்கச் சொல்லி, போலீசைத் தூண்டிவிட்டார்.

முத்துச்சாமிக்கு ஆதரவாக போலீசு களமிறங்கியது. 15.4.2002 அன்று பழனி சாலையில் சென்று கொண்டிருந்த ஐந்து பழவண்டிகளை எக்காரணமுமின்றி பறிமுதல் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சிவராமன், பழங்களுடன் வண்டிகளை மைய பேருந்து நிலையத்திலுள்ள காவல் உதவி மையத்தில் நிறுத்தினார். வியாபாரிகளிடமிருந்த ரூ. 2000-த்தையும் பறித்துக் கொண்டார்.

பழ வியாபாரிகள் மீது போலீசு போட்ட பொய் வழக்கிற்கு அவர்கள் அபராதம் கட்டிய பின்னும், போலீசார் பறிமுதல் செய்த தள்ளு வண்டிகளைத் திருப்பித் தர வில்லை. பழ வியாபாரிகள் போலீசாரையும் தனியாகக் கவனித்தால்தான் பழ வண்டிகளைத் திருப்பித் தருவோம் என அடாவடித்தனம் செய்தனர். போலீசாரின் இந்த சட்டவிரோத ரவுடித்தனத்தை எதிர்த்து தாசில்தாரிடம் முறையிட்ட பின்னும் வண்டிகளை போலீசார் திருப்பித் தரவில்லை. இதனால், பழ வண்டிகளில் இருந்த ரூ. 20,000 மதிப்புள்ள பழங்கள் அழுகி, அந்தச் சிறு வியாபாரிகளுக்கு பெருத்த நட்டம் ஏற்பட்டது.

இதனால் சங்கத்திலிருந்து நட்டஈடு கோரி போலீசார் மீது வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி வண்டிகளைத் திருப்பித் தர இடைக்கால தீர்ப்பு வழங்கி, நட்ட ஈடு வழக்கை ஒத்தி வைத்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவை குப்பைக் கூடையில் வீசிய போலீசு, இன்றுவரை வண்டிகளைத் தரவில்லை. மாவட்ட ஆட்சியர், டி.எஸ்.பி.; எஸ்.பி. என மனுச் செய்தும் பலனில்லை.

போலீசின் இந்த அராஜகத்தைக் கண்டித்து ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன, இதைப் புகைப்படமெடுத்துக் கொண்ட போலீசு பின்னர் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தது.

போலீசு மீதே வழக்குப் போடுகிறாயா எனத் தள்ளு வண்டிக்காரர்கள் மீது அடுக்கடி பொய் வழக்குப் போட, இன்று அச்சிறு வியாபாரிகள் போலீசின் அராஜகத்தை முறியடிக்கும் வகையில் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டு வருகின்றனர்.

— பு.ஜ. செய்தியாளர், கோவை.

மாமூல் தர மறுத்ததற்காக உடுமலை போலீசாரின் 'காவலில்' இருக்கும் பழவண்டி!





படிப்பகம்

# வேலை நிறுத்தத் தடைச் சட்டம்:
# சட்டபூர்வ பாசிசம்

பாசிசக் கும்பல் எதை நடைமுறைப்படுத்துமோ, அதற்கு நேரெதிரான வாய்ச் சவடாலை அவிழ்த்துவிட்டுதான் மக்கள் மத்தியில் தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தும்.

நெருக்கடி நிலையை அறிவித்து, பாசிச கட்டாட்சி நடத்திய இந்திரா காந்தி பேசியது, ''சோசலிசம்''; இரண்டாம் கட்ட சீர்திருத்தத்தைத் தீவிரமாக அமல்படுத்தி வரும் இந்து மத வெறிக் கும்பல், ''தேசியப் பெருமிதம்'', ''தேசப் பாதுகாப்பு'' பற்றி மக்களிடம் தம்பட்டம் அடிக்கிறது.

இதைப் போல, தொழிலாளர்களுக்கு எதிரான, வேலை நிறுத்தத் தடை சட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் ஜெயா கும்பல், வறுமையை ஒழிப்பதற்காகவே இச்சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக அறிவித்திருக்கிறது.

இச்சட்டத்தின் அவசியம் குறித்து சட்ட சபையில் முழங்கிய நிதியமைச்சர் பொன்னையன், ''வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் இங்கே 35 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ளனர். அவர்களின் வறுமை நிலையைப் போக்க வேண்டுமானால் மாநிலத்தில் தொழில் அமைதி ஏற்பட வேண்டும்; பொருளாதாரச் செம்மை ஏற்பட வேண்டும் இதற்கு அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் கடுமையாக உழைத்தால்தான் முடியும்... அதனால்தான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது'' என விளக்கியிருக்கிறார். ஜெயா கும்பலின் இந்த விளக்கம், ''வறுமையை ஒழிப்போம்!'', ''பேச்சைக் குறைப்பீர்; பெருக்குவீர் உழைப்பை'' என்ற நெருக்கடி நிலைக் காலத்தை நினைவுபடுத்தவில்லையா?

''தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் சட்டம்'' என்றழைக்கப்படும் இச்சட்டம், அரசு ஊழியர்கள், அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்டு அத்தியாவசியப் பணி என்று அரசால் அறிவிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த எவரும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது எனக் கூறி, அரசு ஊழியர்கள் - தொழிலாளர்களை நவீன கொத்தடிமைகளாகக் கசக்கிப் பிழிய முயலுகிறது.

இச்சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்தால், மூன்றாண்டு சிறைத் தண்டனை அல்லது ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்துத் தண்டனையாக விதிக்கப்படும் எனத் தொழிலாளர்களைப் பீதியூட்டும் வண்ணம் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களை மட்டுமின்றி, வேலை நிறுத்தத்தைத் தூண்டுவோர், வேலை நிறுத்தத்துக்கு நிதி உதவி செய்வோரையும் தண்டிக்கும் வகையிலும் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது, தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்களை மட்டுமின்றி, வேலை நிறுத்தத்தின்பொழுது தொழிலாளர்கள் குலுக்கும் உண்டியலில் காசு போடும் குடிமகனையும் கூட இச்சட்டத்தின் மூலம் தண்டிக்க முடியும்.

மேலும், ''ஓவர் டைம்'' செய்ய மறுப்பதும், வேலை நிறுத்தமாகக் கருதப்படும் எனப் பீதியூட்டுகிறது இச்சட்டம். ''எந்த அரசு ஊழியன் எட்டு மணி நேரத்துக்கு மேல் வேலை செய்கிறான்?'' எனக் கேள்வி கேட்கும் 'பொறுப்புமிக்க' குடிமகன்கள், தயவு செய்து போக்குவரத்துத் துறையில் வேலை பார்க்கும் ஓட்டுநர்களும், நடத்துனர்களும் சில சமயங்களில் எத்தனை மணி நேரம் தொடர்ந்து வேலை பார்க்கிறார்கள் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரசின் எல்லாத் துறைகளிலும் தன் விருப்ப ஓய்வூதியத் திட்டம் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டு, ஆட்குறைப்பு செய்யப்படும் இவ்வேளையில், வேலைப் பளுவை பணியில் தொடர்ந்து இருப்பவர்களின் தலை மீது திணிப்பதற்காகவே இச்சட்டப் பிரிவு கொண்டு வரப்படுகின்றது. இது மட்டுமின்றி, ''எட்டு மணி நேர வேலை'' என்ற தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை உரிமைக்கே இச்சட்டப்பிரிவு வேட்டு வைக்கிறது.

''அத்தியாவசியப் பணிகளில் வேலை நிறுத்தம் செய்வதைத் தடுத்து அதற்கு எதிராக விரைவாகவும், திறம்படவும் நடவடிக்கை எடுக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலான சட்டம் எதுவும் தற்போது இல்லை. அதனால் இச்சட்டம் அவசியமாகிறது'' என இச்சட்டம் கொண்டு வரப்பட்டதை நியாயப்படுத்துகிறது, பாசிச ஜெயா கும்பல். தமிழக அரசின் இந்த நியாயவாதம் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் அண்டப் புளுகு தவிர வேறில்லை.

✱ மருத்துவமனைகள் மற்றும் இதர நிறுவனங்கள் (தகராறு தீர்வு) சட்டம், மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், காதி - கிராம கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் வேலை நிறுத்தத்திற்குத் தடை விதிக்கின்றது.

✱ அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் ஒரு தொழிலையோ அல்லது சேவையையோ அரசு அத்தியாவசியப் பணி என்று அறிவித்துவிட்டால், அதில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், அரசாங்கத்திற்கும், முதலாளிக்கும் 14 நாள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்; நோட்டீஸ் காலத்தில் வேலை நிறுத்தம் செய்ய முடியாது; நோட்டீஸ் காலம் முடிந்த பின்பும் ஆறு வார காலம் வேலை நிறுத்தம் செய்ய முடியாது. மீறி வேலை நிறுத்தம் நடந்தால் அது சட்ட விரோதமாகும்.

✱ மாநில அரசு தனது அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு தொழிற்சாலை அல்லது நிறுவனத்தில் தகராறுகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தகுந்ததொரு ஏற்பாடு இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தால், அந்த நிறுவனங்களுக்குத் தன்னிச்சையாகவே தொழிற் தகராறு சட்டம் முழுவதிலுமிருந்து விலக்கு அளிக்கலாம். இதன் மூலம் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்திலும் வஞ்சகமான முறையில் வேலை நிறுத்தங்களைச் சட்ட விரோதமாக அறிவிக்கலாம்.

- இப்படி அரசு ஊழியர்களின் / தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களைத் தடை செய்வதற்கு ஏற்கனவே பல கருப்புச் சட்டங்கள் இருக்கும் பொழுது, ஜெயாவோ இன்னும் ஒருபடி மேலே போய் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்து, அதை கிரிமினல் குற்றமாகவும் அறிவிக்கிறார்.

1921-ஆம் ஆண்டு சென்னை - பின்னி ஆலையில் நடந்த வேலை நிறுத்தத்திற்கு எதிராக அல்வாலை நிர்வாகம், ''வேலை நிறுத்தத்தால் எங்கள் இலாபம் போய்விட்டது; எனவே, சங்கத் தலைவர்கள் நட்டஈடு தர வேண்டும்'' என வழக்குத் தொடுத்து, வெற்றி பெற்றது. இப்பொழுது, தடையை மீறி வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மீது ஐந்தாயிரம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கும் சட்டம் இயற்றியிருப்பதன் மூலம் பாசிச ஜெயா, தமிழகத் தொழிலாளர்களைக் காலனிய அடிமைக்கால நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறார்.

'வறுமையை ஒழிப்பதற்காக' கொண்டு வரப்பட்டுள்ள இச்சட்டத்தை வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்கள் ஆதரிக்கிறார்களோ இல்லையோ, அரசுப் பணியில் இல்லாத நடுத்தர வர்க்கக் கனவான்கள் பலரும் ஆதரிக்கவே செய்கிறார்கள். இதற்கு அரசு ஊழியர்கள் / தொழிலாளர்கள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பு மட்டும்



படிப்பகம்

www.padippakam.com

காரணமல்ல; இது போன்ற கடுமையான சட்டங்கள் போட்டால்தான் நாடு முன்னேறும் என்று நடுத்தர வர்க்கம் முட்டாள்தனமாக பாசிசத்துக்கு வால் பிடிக்கவும் செய்கிறது.

ஆனால், கடந்த ஒரு வருட ஜெயாவின் ஆட்சியில் அவரின் பாசிசத் தாக்குதலுக்கு அரசு ஊழியர்களும் / தொழிலாளர்களும் மட்டுமா ஆளாகியிருக்கிறார்கள்?



தனியார்மயத்தை எதிர்த்து போக்குவரத்துத் தொழிலாளர்கள் சென்னையில் நடத்திய ஊர்வலம்: யாருக்குமே இடைஞ்சல் தராத இது போன்ற சாத்வீகப் போராட்டத்தால் கறுப்புச் சட்டங்களைத் தூக்கியெறிய முடியுமா?

★ எந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்காக ஜெயா முதலைக் கண்ணீர் வடிக்கிறாரோ, அதே வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களுக்கு மலிவு விலையில் வழங்கப்படும் ரேசன் அரிசியை நிறுத்தி, அவர்களைப் பட்டினிச் சாவின் பிடியில் தள்ளுவதற்குச் சதித் திட்டம் போட்டு வருகிறார்.

★ உலக வங்கி உத்தரவுப்படி நெல் கொள்முதலை நிறுத்தி விவசாயிகளை ''அம்போ''வென நடுத்தெருவில் நிறுத்திய ஜெயா, விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தை நிறுத்தவும் திட்டம் போடுகிறார்.

★ அரசு கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களோடு இணைக்கச் சட்டத் திருத்தம் கொண்டு வந்ததன் மூலம் ஏழை மாணவர்களின் உயர் கல்வி படிப்பிற்கு வேட்டு வைத்து விட்டார்.

★ அரசு வேலைகளுக்கு ஆளெடுக்கத் தடை போட்டதன் மூலம் தமிழக இளைஞர்களின் தலையில் இடியை இறக்கியிருக்கிறார்.

★ தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் வேலை பார்க்கும் அதிகாரிகள் / ஊழியர்கள் / தொழிலாளர்களுக்குக் கட்டாய விருப்ப ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்திருப்பதன் மூலம் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களுக்கு வில்லியாகி விட்டார்.

★ பொது இடங்களில் சிகரெட் / பீடி குடிப்பதைத் தடுக்கும் சட்டம்; எச்சில் துப்புவதைத் தடுக்கும் சட்டம்; கேபிள் டி.வி. ஒழுங்குப்படுத்தும் சட்டம்; பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதைத் தடுக்கும் சட்டம் எனச் சட்டத்திற்கு மேல் சட்டமாக போட்டு போலீசு யாரையும் கைது செய்யவும், இலஞ்சம் வாங்கி பொறுக்கித் தின்னவும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்.

தமிழக உழைக்கும் மக்களில் எந்தவொரு பிரிவும் தப்பிவிடாதபடி தொடுக்கப்படும் இந்த தொடர் தாக்குதலின் ஒரு கண்ணிதான் வேலை நிறுத்தம் செய்வதை கிரிமினல் குற்றமாகத் தடை செய்யும் இப்பாசிசச் சட்டம்.

அரசு பேருந்துகளையும், மின்சாரத் துறையையும் தனியார்மயமாக்கும் சமயத்தில், அதற்கு எதிராகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களின் ஈடுபடுவதைத் தடுப்பதற்காகவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள்.

போக்குவரத்துத் துறையும், மின்சாரத் துறையும் தனியார்மயமானால், அத்துறைகளில் வேலை பார்க்கும் தொழிலளர்கள் மட்டுமா பாதிக்கப்படுவார்கள்? 'இலவச மின்சாரம்' பெறும் விவசாயி தொடங்கி, இச்சட்டத்தை ஆதரிக்கும் நடுத்தர வர்க்கக் கனவான்களும் கூட பாதிப்பில் இருந்து தப்ப முடியாது. இதனால் அவர்கள் தனியார்மயத்தை எதிர்த்த போராட்டத்தை ஆதரித்தால், அவர்களையும் உள்ளே தள்ளிவிடும் இச்சட்டம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

தனியார்மயத்தை எதிர்ப்பவர்களை ''தீவிரவாதிகள்'' என முத்திரை குத்தி உள்ளே தள்ள ஏற்கனவே ''பொடா'' சட்டம் இருக்கும் பொழுது, அதனின் இளைய பங்காளியாகத்தான் இப்பாசிசச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார், ஜெயா.

ஜெயாவின் இப்பாசிச சட்டத்திற்கு முன்னோடியாக, இருபது ஆண்டுகளுக்கு முன்பே, தொழிலாளர்களின் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கும் இரண்டு சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய காங்கிரசு, இச்சட்டத்தை எதிர்ப்பாகக் கூறுகிறது; தொழிற் தகராறுகள் (திருத்த) சட்டம், தொழிற்சங்கங்கள் (திருத்த) சட்டம் என்ற அந்த இரண்டு கறுப்புச் சட்டங்கள் நிறைவேறுவதற்கு நாடாளுமன்றத்தில் ஆதரவளித்த தி.மு.க.வும் வேலை நிறுத்த தடைச் சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறது. பாசிச ஜெயாவை இந்து மதவெறியை எதிர்க்கும் வீராங்கனையாகக் காட்டி, அரியணையில் அமர வைத்த போலி கம்யூனிஸ்டுகளும், கொஞ்சம்கூட குற்ற உணர்வின்றி இச்சட்டம் கொண்டு வரப்பட்டதை எதிர்த்து முழங்குகிறார்கள்.

சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சிறுபாக்கம் தொகுதிகளில் பாசிச ஜெயாவைத் துணிந்து எதிர்த்து நிற்கும் எதிர்க்கட்சிகள்; வீடு வீடாகச் சென்று ஓட்டு வேட்டையாடும் எதிர்க்கட்சிகள், இது போன்ற பாசிசச் சட்டங்களை எதிர்ப்பதற்கு இப்படித் 'துணிந்து' வேலை செய்வதில்லை. பாசிசத்திற்கு எதிரான அவர்களின் எதிர்ப்பெல்லாம் சட்டமன்றத்தோடு முடங்கிப் போய்விடுகிறது.

நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் தொழிலாளர்கள் தங்களின் கோரிக்கைகளை அடைவதற்கு, அவர்கள் பெற்றிருக்கும் ஒரே சட்டபூர்வ ஆயுதம் வேலை நிறுத்தம்தான். பாசிச ஜெயா, அந்த உரிமையையும் பறித்து, தாராளமயத் தாக்குதலின் முன் தொழிலாளர்களை நிராயுதபாணியாக்கி விட்டார். எனவே, தமிழகத் தொழிலாளர்களும், உழைக்கும் மக்களும் இக்கறுப்புச் சட்டத்தை முறியடிக்க 'சட்ட விரோதமான' வழிகளில் போராடுவதைத் தவிர இனி வேறு வழியில்லை.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## உ.பி.யில் மாயாவதி ஆட்சி:

# பிழைப்புவாதத்தின் வெற்றியா? தலித்தியத்தின் வெற்றியா?

ஓட்டுக்கட்சி அரசியலில் ஒரு சில எம்.பி.க்கள் - எம்.எல்.ஏ.க்கள் அல்லது குழுக்கள் இதர ஓட்டுக்கட்சிகளுடன் பதவிக்காகவும் பணத்துக்காகவும் பேரங்கள் நடத்திக் கட்சி மாறுவதும் அணிமாறுவதும் வாடிக்கை. இதை அரசியல் விபச்சாரம் என்றும் இத்தகையோரை யாருக்கும் விலை போகும் பிழைப்புவாதிகள் என்றும் அரசியல் விமர்சகர்கள் சாடுவதுண்டு. இப்போது அதுவே ஒருபடி முன்னேறி, ஒரு கட்சியே குதிரை மந்தைகளை வைத்து பேரங்கள் நடத்தி விலைபோவதாக வளர்ந்து விட்டது. இத்தகைய அரசியல் விபச்சாரமும் பிழைப்புவாதச் சித்தாந்தத்தையும் கொண்ட தலித்திய கட்சியாக பகுஜன் சமாஜ் கட்சி உருவெடுத்திருக்கிறது.

''திலக், தராஜூ, தல்வார் ஆகியவற்றைச் செருப்பால் அடிப்போம்'' என்று முழங்கி வந்தவர் மாயாவதி. திலக் - நெற்றியில் பொட்டு வைக்கும் பார்ப்பனரையும், தராஜூ-பனியா எனும் வணிக சாதியினரையும், தல்வார் - தலைப்பாகை அணியும் ராஜபுத்திர சாதியினரையும் செருப்பால் (தாழ்த்தப்பட்டோரில் ஒரு பிரிவினரது தொழில்) அடிப்போம் என்று முழங்கி வந்தவர், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவியான மாயாவதி. உயர்சாதி இந்துக்களுக்கு எதிராக, குறிப்பாக பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக எப்போதும் மேடைகளில் பேசி வந்தவர். அம்பேத்கரையும் பெரியாரையும் தமது வழிகாட்டிகள் என்று போற்றியவர். நடந்து முடிந்த உ.பி. சட்டமன்றத் தேர்தலின் போது பாரதீய ஜனதா கூட்டணிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து ஓட்டுப் பொறுக்கியவர்.

எந்தக் கட்சியை எதிர்த்து அரசியல் நடத்தி வந்தாரோ அந்தக் கட்சியுடன், 1997-ஆம் ஆண்டில் எந்தக் கட்சி தனது முதுகில் குத்தி ஆட்சியைக் கவிழ்த்ததோ அந்தக் கட்சியுடன் - அதே பாரதீய ஜனதாவுடன் தேர்தலுக்குப் பிறகு புதிய கூட்டணி கட்டிக் கொண்டு உ.பி.யின் முதல்வராகியுள்ளார், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவி மாயாவதி!

தலித் பிரச்சினையை தலித் மக்களால் மட்டுமே உணர முடியும்; தலித்துகளுக்கு தலித்துகள்தான் தலைமை தாங்க வேண்டும்; தலித்துகளே, பிற கட்சிகளில் சேராதீர்கள்; பிற ஆதிக்க சாதியினரை நமது கட்சியில் சேர்க்க மாட்டோம் - என்றெல்லாம் கொள்கைச் சவடால் அடித்துவந்த ''பகுஜன்'' சமாஜ் கட்சி இன்று ''சர்வஜன்'' கட்சியாகிவிட்டது. உ.பி. சட்டமன்றத் தேர்தல் பரப்புரைகளிலும் தமது கட்சி சர்வஜன கட்சி என்றே மாயாவதி திரும்பத் திரும்ப சுட்டிக் காட்டினார். அதாவது, தாழ்த்தப்பட்டோர் மட்டுமின்றி பிற சாதியினரையும் தமது கட்சி அரவணைத்துக் கொண்டு சர்வஜனக் கட்சியாகி விட்டது என்றார்.

ஆதிக்க சாதியினரையும் அவர்களது கட்சிகளையும் மனுவாதிகள் என்று சாடிவந்த பகுஜன் சமாஜ் கட்சி, இப்போது அதே மனுவாதிகளைத் தமது கட்சியில் சேர்த்துக் கொண்டு ஓட்டுப் பொறுக்கியது. பிராமண எதிர்ப்பு - மேல்சாதி எதிர்ப்பு என்றெல்லாம் சவடால் அடித்து வந்த இக்கட்சி, இன்று அவர்களின் நம்பகமான கூட்டாளியாகி விட்டது. நடந்து முடிந்த உ.பி. சட்டமன்றத் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்ற 98 பேரில் 32 பேர் மேல்சாதியினராவர்.

வெறும் தலித் ஓட்டு மட்டும் தேர்தல் வெற்றிக்கு உதவாது; பிற சாதியினரின் ஓட்டும் தேவை என்பதால் அவசியமான இடங்களில் ஆதிக்க சாதியினருடன் கூட்டணி கட்டிக் கொண்டு, அச்சாதி வேட்பாளர்களையே தமது கட்சியின் சார்பில் நிறுத்தி பகுஜன் சமாஜ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இது தெரிந்த உண்மை. தமது சாதி ஆதிக்கத்துக்கு பகுஜன் சமாஜ் கட்சியால் எந்த இடையூறும் ஏற்படாது என்ற உத்தரவாதமும் நம்பிக்கையும் கிடைத்ததால்தான் ஆதிக்க சாதியினர் பகுஜன் சமாஜ் கட்சியை ஆதரித்துள்ளனர். இது தெரியாத உண்மை!

பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் நின்று வெற்றி பெற்ற ஆதிக்க சாதி வேட்பாளர்களும் தாங்கள் தீண்டாமையை எதிர்ப்பதாகவோ, தமது சாதியினர் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவிவரும் அடக்குமுறை - சுரண்டலை எதிர்ப்பதாகவோ வாயளவில் கூட வாக்குறுதி அளிக்கவில்லை. ஆனாலும் இவர்கள் தலித்திய பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றுள்ளார்கள்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற பூரிப்பில் உ.பி. முதல்வர் மாயாவதி: இது தலித்தியத்தின் வெற்றியா?



இது தலித்தியத்தின் வெற்றியா? அல்லது தலித்திய பிழைப்புவாதத்தை நிறுவனமயமாக்கி அதனுடன் கூட்டணி கட்டிக் கொண்டு தமது ஆதிக்கத்தைத் தொடரும் ஆதிக்க சாதிகளின் சாணக்கியத்தனத்தின் வெற்றியா? சாதியக் கட்டமைவுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத தலித்திய கட்சிகளுடன் கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்குவதில் பிரச்சினை இல்லை என்பதாலேயே பிற ஆதிக்க சாதியினர் பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆதாயமடைகின்றனரே தவிர, தலித்திய எழுச்சியைக் கண்டு ஆதிக்க சாதிகள் அடிபணிந்து விட்டதால் அல்ல.

முழுக்க நனைந்த பிறகு முக்காடு போடுவது அவசியமில்லாமல் போய்விடுகிறது. பிழைப்புவாதமே சித்தாந்தமாகிவிட்ட பிறகு கொள்கை, லட்சியம், நேர்மை எல்லாம் ஏட்டுச் சுரைக்காயாகி விடுகிறது. உ.பி. மாநிலம் - சாதி அரசியலும் கிரிமினல் அர



படிப்பகம்

www.padippakam.com

சியலும் கொடிகட்டிப் பறக்கும் மாநிலம். எல்லா ஓட்டுக் கட்சிகளிலும் கிரிமினல் அரசியல்வாதிகள் நீக்கமற நிறைந்திருக்கும் போது, தலித் கட்சிகள் மட்டும் இளிச்சவாயர்களாக இருக்க முடியுமா? இன்று பகுஜன் சமாஜ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களில் கணிசமானோர் கிரிமினல் பின்னணி கொண்டவர்கள்.

உ.பி.யின் கடந்த பா.ஜ.க. ஆட்சியில் ஏறத்தாழ 15-க்கும் மேற்பட்ட கிரிமினல் குற்றவாளிகள் அமைச்சர்களாக இருந்தனர். இதிலே அமர்மானி திரிபாதி என்ற ஆதிக்க சாதிக்காரர், ஆள்கடத்தல் - பணம்பறிப்புத் தொழிலில் கொட்டை போட்ட பேர்வழி. அம்பலப்பட்டுப்போன இவரை, இம்முறை வேட்பாளராக நிறுத்த பா.ஜ.க. மறுத்துவிட்டது. அதனாலென்ன? நாங்கள் கை கொடுக்கிறோம் என்று பகுஜன் சமாஜ் கட்சி முன்வந்தது. உடனே அவர் பகுஜன் சமாஜ் கட்சியில் சேர்ந்தார். வேட்பாளராக நிறுத்தப்பட்டு வெற்றியும் பெற்றுள்ளார். தனது அமைச்சரவையை விரிவுபடுத்தப் போவதாக மாயாவதி அறிவித்துள்ள நிலையில், இத்தகைய ஆதிக்க சாதி கிரிமினல் பேர்வழிகள் தலித் அரசின் அமைச்சர்களாக வலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



பகிரங்க அரசியல் விபச்சாரம்: இந்துவெறி பா.ஜ.க.வுடன் தேர்தலுக்குப் பிறகு கூட்டணி சேர்ந்து சட்டமன்றப் பெரும்பான்மைக்கு ஆளுநரிடம் ஆதாரம் காட்டும் மாயாவதி.

தாழ்த்தப்பட்டோருக்கான நலத்திட்டங்களை ஆதிக்க சாதி அதிகார வர்க்கம் நிறைவேற்றாமல் முட்டுக் கட்டை போட்டு வருகிறது என்று சாடி வந்த மாயாவதி, இப்போது பதவிக்கு வந்ததும் பார்ப்பன-ஆதிக்க சாதி அதிகாரிகளையே முக்கிய பொறுப்புகளில் நியமித்துள்ளார். முதன்மைச் செயலாளர் அனில் குமார், நீர்ப்பாசனத்துறை செயலாளர் சதிஷ் அகர்வால், மின்துறை தலைவர் ரஸ்டோகி என தலைமைச் செயலகத்தில் ஆதிக்கசாதி உயரதிகாரிகளே முக்கிய பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இப்படி எல்லா அரங்குகளிலும் 'சர்வஜன' கொள்கையை பகுஜன் சமாஜ் கட்சி செயல்படுத்தக் கிளம்பி விட்டது.

உ.பி.யில் இந்துவெறி பாரதீய ஜனதா 88 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்று மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விழுந்து கிடக்கிறது. ஆனாலும் அது துவண்டு போகாமல் தனது பாசிச இந்துவெறி சித்தாந்தத்தைத் தீவிரப்படுத்துவதற்கு முக்கிய அடிப்படையாக இருப்பது தலித்திய பிழைப்புவாத பகுஜன் சமாஜ் கட்சிதான்.

உ.பி. தேர்தல் முடிந்ததுமே நானே அடுத்த முதல்வர் என்று தனது எம்.பி. பதவியிலிருந்து விலகி காத்துக் கிடந்த மாயாவதி, பா.ஜ.க.வுடன் கூச்ச நாச்சமின்றி பேரங்களில் இறங்கினார். குஜராத்தில் இந்துவெறிப் படுகொலைகள் தலைவிரித்தாடுகிறதே என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, ''ஏன்? கோத்ரா ரயில் எரிப்பு என்னவாயிற்று?'' என்று இந்துவெறியர்களின் குரலையே எதிரொலித்தார். முதல்வர் பதவிக்காக, குஜராத் விவகாரத்தையொட்டி நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் பா.ஜ.க.வுக்கு ஆதரவு, பொடா சட்டத்துக்கு ஆதரவு என்று மாயாவதியும் பகுஜன் சமாஜ் கட்சியும் இந்துவெறி பாசிஸ்டுகளின் காலை நக்கும் இழி பிறவிகளாக மாறினர். உ.பி.யில் முதல்வர் பதவியில் அமர்ந்ததும், பா.ஜ.க.வின் விசுவாச அடியாளாகவே மாறிப் போனார் மாயாவதி. அயோத்தியில் இந்து வெறியர்களை எதிர்த்து மத நல்லிணக்க ஊர்வலம் நடத்திய இ.பொ.க. (மா-லெ) லிபரேஷன் குழுவின் மாணவர் அமைப்பின் மீது போலீசை ஏவி தடியடி தாக்குதல் நடத்தி விரட்டியது மாயாவதி அரசு. கடந்த மாதத்தில், முதல் இந்திய சுதந்திரப் போர் (1857) தியாகிகளை நினைவு கூர்ந்து நடத்த திட்டமிட்டிருந்த இடதுசாரி கட்சிகளின் பேரணி - பொதுக்கூட்டத்துக்கும் அனுமதி தர மறுத்து விட்டது.

''மாயாவதி - உ.பி.யின் கட்டாயத் தேவை'' என்று முழங்கியது பகுஜன் சமாஜ் கட்சி. ''அது உண்மைதான்; ஆனால் நாங்கள் பகுஜன் சமாஜ் கட்சிக்கு கட்டாயத் தேவை'' என்று இப்போது எகத்தாளம் செய்கிறது பா.ஜ.க.

தாழ்த்தப்பட்டோரைத் திரட்டிக் கொண்டு பலத்தைக் காட்டி, எந்தக் கட்சி ஆட்சி அமைவதானாலும் தலித் கட்சியின் ஆதரவு தேவை என்கிற முக்கிய இடத்தைப் பெறுவதே பகுஜன் சமாஜ் கட்சியின் லட்சியம். இதுவே அனைத்துத் தலித்திய பிழைப்புவாதிகளின் இலட்சியமாகவும் உள்ளது. எனவேதான் உ.பி.யில் மாயாவதி முதல்வரானதும், ''இன்று உ.பி. மாநிலம் கன்சிராம்; மாயாவதி என்று தனது முகவிலாசத்தை மாற்றி உயரத் தூக்கிக் காட்டிக் கொண்டிருக்கிறது... பகுஜன் சமாஜ் கட்சி அசைக்க முடியாத ஒரு சக்தியாக அங்கே உருவெடுத்துள்ளது... இன்று மாயாவதி தயவு இல்லாமல் அங்கே யாரும் ஆட்சியமைக்க முடியாது. அதாவது சூத்திரனும் பஞ்சனும் அனுமதிக்காமல் போனால் இனி இந்தியாவில் எங்கும் யாராலுமே ஆட்சி அமைக்க முடியாது என்பதை நடைமுறையில் நிரூபித்துக் காட்டிக் கொண்டிருப்பதுதான் பகுஜன் சமாஜ் கட்சி'' என்று உச்சி முகர்ந்து பாராட்டுகிறது, பேராசிரியர் பெரியார்தாசனை சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும் ''மீண்டும் அறிவு வழி'' எனும் மாத இதழ்.

பகுஜன் சமாஜ் கட்சி அசைக்க முடியாத சக்தியாம்! ஆனால் இந்த அசைக்க முடியாத சக்தியைக் கொண்டு சாதி ஆதிக்கத்தை அசைக்க முயற்சிக்கவில்லை; பார்ப்பன இந்துமத ஆதிக்கத்தை அசைக்க முயற்சிக்கவுமில்லை; தனிக்குவளை, தனிக்கிணறு, பாலியல் வன்முறை, படுகொலை எனத் தொடரும் சாதிய அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை என்றால் அந்த அசைக்க முடியாத' சக்தியால் தாழ்த்தப்பட்டோருக்கு என்ன பயன்?

ஆனால், தாழ்த்தப்பட்டோரைத் திரட்டிக் கொண்டு பலத்தைக் காட்டி ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் பேரங்கள் நடத்தி சோரம் போகும் பிழைப்புவாதிகளுக்கு ஆதாயமிருக்கிறது. எம்.எல்.ஏ.,



படிப்பகம்

www.padippakam.com

எம்.பி.; அமைச்சர் பதவிகளும் அரசாங்க சலுகைகள் - சன்மானங்களும் பெற்று பொறுக்கித் தின்ன வாய்ப்பாக இருக்கிறது. எனவேதான், எந்தக் கட்சி வெற்றி பெறுவதாக இருந்தாலும் தலித் கட்சியின் ஆதரவு தேவை என்ற முக்கிய நிலையை அடைவதை தலித்திய பிழைப்புவாதிகள் இலட்சியமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பிழைப்புவாதத்தை நியாயப்படுத்தும் வகையில், ''பூந்தமல்லி தொகுதியில் 2296 வாக்குகள் மட்டுமே குறைவாகப் பெற்று தி.மு.க. தோல்வியடைந்திருக்கிறது. ஆனால் அங்கே புரட்சி பாரதம் கட்சித் தலைவர் பூவை.மூர்த்தி பெற்ற வாக்குகள் 21,195. தி.மு.க. தனது கூட்டணியில் புரட்சி பாரதத்தை இணைத்துக் கொண்டிருந்தால் அந்தக் கூட்டணிக்கு மேலும் ஒரு தொகுதி கிடைத்திருக்கும். கண்ணுக்குத் தெரிந்தே கைநழுவிப் போன வெற்றி இது. இதை முன்கூட்டியே தி.மு.க.வினர் உணராமல் போனதுதான் மிகப்பெரிய துரதிருஷ்டம். கடலூர் தொகுதியில் தி.மு.க. வெறும் 34 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் அங்கே 929 வாக்குகள் பெற்று புரட்சி பாரதம், த.மா.கா.வின் தோல்விக்குக் காரணமாகியிருக்கிறது. இதேபோல சென்னை துறைமுகம் தொகுதியில் புரட்சி பாரதத்தை இணைத்துக் கொண்டிருந்தால் அ.தி.மு.க. கூட்டணி அங்கே வெற்றி பெற்றிருக்கும். அதைத் தவற விட்டது அ.தி.மு.க. கூட்டணி'' என்று புள்ளி விபரங்களைக் காட்டி அங்கலாய்க்கின்றனர் தலித்திய பிழைப்புவாதிகள்.

''தலித் கட்சிகளைக் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. இதை பெரிய கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் அது அந்தக் கட்சிகளுக்கே பெரிய நஷ்டம் என்பதை தேர்தல் முடிவுகள் காட்டி விட்டன'' என்று யாருக்கும் சோரம் போகும் தமது வேசித்தனத்தை தலித்திய பிழைப்புவாதிகள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர். (''மீண்டும் அறிவு வழி,'' ஏப்ரல்-மே 2002)

தலித் விடுதலை என்றும், பார்ப்பன - ஆதிக்க சாதி எதிர்ப்பு என்றும் ஆவேசக் குரலெழுப்பி வந்தவர்கள், இன்று தலித் மக்களைத் திரட்டிக் கொண்டு பலத்தைக் காட்டி, யாருக்கும் சோரம்போகத் தயார் என்று பகிரங்கமாக அறிவிக்கத் துணிந்துவிட்டார்கள். புரட்சிகர அரசியல் - சித்தாந்தம் எதுவுமின்றிச் சீரழியும் இத்தகைய பிழைப்புவாத இயக்கங்களை நிறுவனமயமாக்கி ஆளும் வர்க்கங்களும் - ஆதிக்க சாதிகளும்தான் இறுதியில் ஆதாயமடைகின்றன.

''உ.பி.யில் தலித் ஆட்சி; வடக்கே ஒரு துருவ நட்சத்திரம்'' என்று பகுஜன் சமாஜ் கட்சியையும் மாயாவதியையும் தலித்திய பிழைப்புவாதிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாமும் பாராட்டத்தான் வேண்டும். தலித்தியம் என்றால் பிழைப்புவாதம் என மீண்டும் நிரூபித்துக் காட்டிய தற்காக!

● பாலன்

# சி.பி.எம். குண்டர்களின் ரவுடித்தனம்

சென்னை - சைதாப்பேட்டை இடைத்தேர்தலில் போட்டியிட்டு ஓட்டுப் பொறுக்கக் கிளம்பியுள்ள போலி கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.எம்., செங்கொடியோடு பாசிச காங்கிரசு-த.மா.கா. கொடிகளையும் தூக்கிக் கொண்டு வெட்கமின்றிப் பிரச்சாரம் செய்து வருகிறது. மக்கள் விரோத பா.ஜ.க. கூட்டணியையோ, பாசிச ஜெயா கும்பலையோ எதிர்க்கத் துணிவின்றி, அரசியல் ஆண்டிகளாக ஓட்டுப் பிச்சை கேட்டு வருகிறது.

சைதை தொகுதியில் இப்போலி ஜனநாயகத் தேர்தலை அம்பலப்படுத்தி, 'ஓட்டுப் போடாதே! புரட்சி செய்' என்ற முழக்கங்களுடன் ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தை வீச்சாக நடத்தி வருகின்றன. இதை விளக்கி வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை மக்களிடம் விநியோகித்து ஆட்டோ பிரச்சாரம், தெருமுனைக் கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன. உழைக்கும் மக்களும் இப்புரட்சிகர அரசியல் பிரச்சாரத்தை வரவேற்று, நன்கொடை அளித்து ஆதரித்து வருகின்றனர்.

சைதை - மேட்டுப்பாளையம் பகுதியில் 16.5.02 அன்று இவ்வாறு பிரச்சாரம் செய்து வந்த நிலையில், அதே பகுதியில் சில மணிநேரம் கழித்து சி.பி.எம். தொண்டர்களும் குண்டர்களும் ஓட்டுக் கேட்டு வந்து மக்களிடம் நன்கொடை கோரினர். உழைக்கும் மக்களோ, ''இப்பத் தானே நீங்க ஓட்டுப் போட வேண்டாம்னு பிரச்சாரம் செய்தீங்க! அதுக்குள்ள திரும்ப வந்து ஓட்டுப் போடச் சொல்றீங்களே!'' என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டனர். ''அது நாங்க இல்லீங்க'' என்று சி.பி.எம். தொண்டர்கள் விளக்கமளித்த போதிலும், உழைக்கும் மக்கள் அதை ஏற்காமல், ''அவங்களும் செங்கொடியோடு தானே வந்தாங்க!'' என்று மடக்கினர்.

தமது பிரச்சாரம் மக்களிடம் எடுபடாமல் போனதால் ஆத்திரமடைந்த சி.பி.எம். தொண்டர்களும் குண்டர்களும் இப்பகுதியில் வேறிடத்தில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த பு.ஜ.தொ.மு. தோழர்களைத் தடுத்து நிறுத்தி, ''ஏண்டா, தே... பசங்களா! தி.மு.க., அ.தி.மு.க.விடம் காசு வாங்கிக்கிட்டு ஓட்டுப் போடாதேன்னு பிரச்சாரம் செய்யுறீங்களா?'' என்று தாக்க வந்தனர். ''ஆண்டிப்பட்டியில் ஜெயா போட்டியிட்ட போது, தேர்தலில் பங்கேற்கவில்லை என்று அறிவித்தீர்களே! அப்போது யாரிடம் காசு வாங்கினீர்கள்?'' என்று தோழர்கள் கேள்வி எழுப்பியதும், பதில் பேச முடியாமல், ''டேய்! ஒழுங்கா திரும்பிப் போயிடுங்க!'' என்று உதார் விட்டுக் கலைந்து சென்றனர்.

பின்னர் மாலையில் தோழர்கள் பிரச்சாரத்தைத் தொடர்ந்த போது, ''ஏண்டா எங்க கொடியை வெச்சிருக்கிறீங்க? நாங்க ஓட்டுகேட்டு செங்கொடியோட போனா ஜனங்க எங்களத் திட்டுறாங்கடா! இனிமே செங்கொடியோட உங்களைப் பார்த்தா உதைப்போம்!'' என்று பு.ஜ.தொ.மு. பிரச்சார ஆட்டோவில் கட்டியிருந்த கொடிகளைப் பிடுங்க முற்பட்டனர். இந்த ரௌடித்தனத்தைத் தடுத்து தோழர்கள் வாதிட்டதும், ஆபாச வசவுகளால் தமது கட்சியின் பண்பாட்டை வெளிப்படுத்தினர். இதைக் கண்டு அங்கு திரண்ட தரைக்கடை வியாபாரிகளும் பொதுமக்களும் என்னவென்று விசாரித்ததும் சி.பி.எம். குண்டர்கள் பின்வாங்கிக் கலைந்தோடினர்.

19.5.02 அன்று சி.பி.எம். கட்சியினர் ஓட்டுப் பிச்சை கேட்டு சைதையில் சைக்கிள் ஊர்வலம் நடத்தினர். அதே நாளில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பு.ஜ.தொ.மு. தோழர்கள், சைக்கிள் ஊர்வலம் வந்தபோது தமது ஆட்டோ பிரச்சார ஒலிபெருக்கியை நிறுத்திவிட்டு தெருவோரத்தில் அமைதியாக நின்றனர். இருப்பினும் எண்ணிக்கையில் அதிகமாக உள்ள தைரியத்தில் பு.ஜ.தொ.மு. பிரச்சார ஆட்டோவை முற்றுகையிட்ட சி.பி.எம். குண்டர்கள், ''ஏண்டா செங்கொடியைக் கட்டிக்கிட்டு ஓட்டுப் போடாதேன்னு பிரச்சாரம் செய்யுறீங்க?'' என்று கேட்டு ஆபாச வசவுகளுடன் ஆட்டோவில் கட்டியிருந்த கொடிகளைப் பறித்துக் கொண்டு தப்பியோடி விட்டனர். இந்த ரௌடித்தனத்தை அம்பலப்படுத்தி ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

அரிவாள் - சுத்தியல் பொறித்த செங்கொடி அனைத்துலக உழைக்கும் மக்களின் பொதுவுடைமை. அதில் தனியுரிமை கோர எவருக்கும் உரிமையில்லை. செங்கொடியைக் கேடாகப் பயன்படுத்தி வரும் போலி கம்யூனிஸ்டு துரோகிகளிடமிருந்து அதைப் பறித்தெடுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.



படிப்பகம்

# போராட்டத்தில் ஊழியர்கள் உல்லாசத்தில் தலைவர்கள்

எதிர்க்கட்சியாக உள்ளபோது ஆளுங் கட்சியை எதிர்த்து போலி கம்யூனிஸ்டுகள் போராட்டம் நடத்துகிறார்கள் என்றால், அது ஏதோ உழைக்கும் மக்களை உணர் வூட்டிப் புரட்சிக்கு அணிதிரட்டும் நடவடிக்கை அல்ல; அது வெறும் சடங்குதான்! சந்தேகமிருந்தால் போலி கம்யூனிஸ்டு கட்சியான சி.பி.எம்-இன் கேரள மாநிலச் செயலாளர் திருவாளர் பினாரயி விஜயனிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

அண்மையில், கேரளாவை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து சி.பி.எம். கட்சி ஊழியர்கள் மாநிலமெங்கும் 10 நாட்களுக்கு தொடர் தர்ணா போராட்டத்தை நடத்தினர். இந்தப் போராட்டத்தை சி.பி.எம். மாநிலச் செயலாளரான விஜயன் தலைமையேற்று வழிநடத்தியிருப்பார் என்று நீங்கள் கருதினால், அது மூட நம்பிக்கை. ஏனெனில், சி.பி.எம். செயலாளர் விஜயன், ஊழியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு ''டாட்டா'' காட்டி விட்டு தனது குடும்பத்துடன் விடுமுறையைக் கழிக்க சிங்கப்பூருக்கு உல்லாசச் சுற்றுலா சென்றுள்ளார்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானத்தில் விஜயன் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வாராம். அதையொட்டி அந்த விமான நிறுவனம் சிங்கப்பூருக்குச் சுற்றுலா சென்றுவர இலவசப் பயணச்சீட்டுகளை வழங்கியுள்ளது. அந்தச் சலுகையை வீணடித்து விடாமல் விஜயன் தனது குடும்பத்தோடு கோடை விடுமுறையைக் கழிக்க சிங்கப்பூருக்குச் சுற்றுலா கிளம்பி விட்டார். அப்படியானால் தர்ணா போராட்டம்...? ''அதை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்; இந்தச் சலுகையை விட்டால் அப்புறம் விடுமுறை கிடைக்காது; உல்லாசச் சுற்றுலாவும் செல்ல முடியாது தோழரே!'' என்ற தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறார் விஜயன்.

விடுமுறைக்குச் சுற்றுலா செல்வதும் இதற்காகவே தமது வருவாயில் ஒரு பகுதியை மக்கள் சேமிப்பதும் ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக உள்ளது. ஆனால், நமது நாட்டில் அவசியத்தையொட்டி உறவினர் வீடுகளுக்குச் செல்வதும் கோயில் அல்லது திருவிழாவுக்குச் செல்வதும்தான் உழைக்கும் மக்களின் சுற்றுலாப் பயணமாக உள்ளது. தாராளமயம் புதிய எல்லைகளைத் திறந்து விட்ட பிறகு, ஏகாதிபத்தியக் கலாச்சாரத்தின்படி விஜயனும் கட்சி வேலைகளுக்கு விடுமுறை அளித்துவிட்டு, குடும்பத்தோடு சுற்றுலா கிளம்பிவிட்டார். அதைத் தவறாகக் கருதக் கூடாது; அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் போலி கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடு.

ஆனால், கட்சி அணிகளோ ஆத்திரமடைந்தார்கள். சொன்னால் வெட்கக்கேடு; சொல்லாவிட்டால் மானக்கேடு என்று குமுறிய கட்சி அணிகள், சி.பி.எம். கட்சியில் விஜயன் கோஷ்டிக்கு எதிர்கோஷ்டியாகச் செயல்பட்டு வரும் அச்சுதானந்தனிடம் முறையிட்டார்கள். அவர் இந்த விவகாரத்தை கட்சியில் காரசாரமாக விமர்சிப்பார் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ, ''விடுமுறையைக் கழிக்க உல்லாசச் சுற்றுலா செல்வதில் தவறில்லை'' என்று விஜயனின் செயலை நியாயப்படுத்தியுள்ளார். அதேசமயம் எதிர்கோஷ்டித் தலைவரைச் சாடும் நோக்கில், ''நானும் அடிக்கடி விமானப் பயணம் செல்வதுண்டு; ஆனால் இலவசப் பயணச் சீட்டு சலுகையைப் பெற முயற்சித்ததில்லை'' என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரத்தையொட்டி திருவாளர் அச்சுதானந்தன் இன்னுமொரு உண்மையையும் போட்டு உடைத்து விட்டார். ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அவர் இதய சிகிச்சைக்காக இலண்டனுக்குப் பறந்து சென்றாராம். ''ஏன், உள்நாட்டிலேயே சிகிச்சை பெற வாய்ப்பில்லையா?'' என்று கேட்டதற்கு, ''நமது நாட்டு மருத்துவமனைகளைப் பற்றித் தெரியாதா? சிகிச்சை என்ற பெயரில் என்னை விரைவில் சாகடித்திருப்பார்கள்'' என்று விளக்கமளித்துள்ளார்.

கோடானுகோடி உழைக்கும் மக்கள் அரசாங்க மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போது, அவர்களுக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் போலி கம்யூனிஸ்டு தலைவர்களுக்கு இலண்டனில் சிறப்பு சிகிச்சை; விமானப் பயணம் என்று தமது கட்சியின் வர்க்கத் தன்மைக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். ●




## அம்பலமானது போலீசின் அடாவடித்தனம்

**மதுரை ஜெய்ஹிந்த்புரம் பகுதி பி-6 காவல் நிலையத்தினர் அப்பகுதி தரைக்கடை வியாபாரிகளிடம் ரவுடித்தனம் செய்வது, மாமூல் பறிப்பது என அராஜகம் செய்து வருகின்றனர். பூக்கடைகளில் பூக்கூடைகளை எட்டி உதைப்பது, பழக்கடைகளைச் சூறையாடுவது, வடைக் கடைகளில் காசு தராமல் வடைகளை விருப்பத்திற்குத் தின்பது என அடாவடித்தனம் செய்து வருகிறது போலீசு.**

**கடந்த 8.5.2002 அன்று ஊனமுற்ற பழ வியாபாரி ஒருவர் போலீசு கேட்டதுமே லஞ்சம் தராததால் அவரை அடித்து, அவரது பழவண்டியையும் உடைத்தெறிந்தனர்.**

**செய்தியறிந்த பு.மா.இ.மு.வினர் போலீசின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்தி சுவரொட்டி இயக்கமெடுத்தனர். இது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.**

**வீதியெங்கும் தமது அராஜகம் அம்பலமாவதைப் பொறுக்காத போலீசு, சுவரொட்டிகளைத் தேடித் தேடிக் கிழித்து, தாங்கள் மக்கள் விரோதிகளே என்பதை நிரூபித்துக் கொண்டனர்.**

**— பு.மா.இ.மு., மதுரை.**

www.padippakam.com

"மே நாள் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆர்ப்பாட்ட நாள்" என்றார் லெனின். சிகாகோ தொழிலாளர்களின் தியாகத்தை நினைவுகூர்வது மட்டும் போதாது; முதலாளித்துவத்திற்கு எதிராக அவர்கள் துவங்கிய போராட்டத்தை அதன் இறுதி எல்லையான கம்யூனிசத்திற்குக் கொண்டு செல்வதுதான் தொழிலாளி வர்க்கத்தின் கடமை; அதுதான் மே நாள் தியாகிகளுக்குச் செலுத்தும் அஞ்சலி.

ஆனால், மறுகாலனியாக்கத்தால் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டு வரும் நமது நாட்டில் போலி கம்யூனிஸ்டுகள் மே நாளை ஒரு சடங்காக அனுசரிப்பது கூடக் குறைந்து வருகிறது.

அதேசமயம், புரட்சிகர கம்யூனிஸ்டு மரபின் பிரதிநிதியாக ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப் புகள், தமிழகத்தில் மே நாளை அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக நிலை நாட்டும் பணியைச் செய்து வருகின்றன. "நாட்டை மீண்டும் கால னியாக்காதே! மரணக்குழியில் மக்களைத் தள்ளாதே!" "காட் ஒப்பந்தத்தை கிழித்தெறி! உலக வர்த்தகக் கழகத்திலிருந்து வெளி யேறு!" என்ற முழக்கங்களின் கீழ் மறுகாலனியாதிக்கத்திற்கு எதி ரான ஆர்ப்பாட்டமாக நடத்தப்பட்டது இவ்வாண்டின் மேதினம்.

"விவசாயத்தை அழிக்காதே" என்ற முழக்கத்தின் கீழ் திருவா ரூரிலும், "பொதுத்துறையைத் தனியார்மயமாக்காதே" என்ற முழக் கத்தின் கீழ் நெய்வேலியிலும், "கைத்தறி - விசைத்தறித் தொழில்களை அழிக்காதே" என்ற முழக்கத்தின் கீழ் ஈரோட்டிலும் மே நாள் பேரணி, ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## திருவாரூர்

### "விவசாயத்தை அழிக்காதே"

நெல் கொள்முதலை நிறுத்துவது, இந்திய உணவுக் கழகத்தை மூடுவது, உரம் - பூச்சி மருந்து மானிய வெட்டு, பாசன நீருக்குக் காசு வசூலிக்க இலவச மின்சார வெட்டு, உணவு தானிய இறக்குமதி போன்ற பல்முனைத் தாக்குதல்கள் மூலம் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை அழிப்பது உலக வர்த்தகக் கழகத்தின் திட்டம். அதன் ஓர் அங்கமாக தஞ்சை விவசாயிகளின் நெல்லைக் கொள்முதல் செய்வதைத் திடீரென்று நிறுத்தியது ஜெ. அரசு.

இந்தக் கொள்முதல் நிறுத்தம் என்பது தஞ்சை விவசாயிகளின் பிரச்சினை மட்டுமல்ல, விவசாயத்தை அழிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே என்பதையும், மறுகாலனியாக்கக் கொள்கையுடன் இதற் குள்ள உறவை அம்பலப்படுத்தியும் தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் ஏப்ரல் மாதம் முழுவதும் பிரச்சாரம் நடத்தப்பட்டது. திருவாரூரைச் சுற்றியுள்ள 50 கிராமங்களில் ஆறு நாட்கள் இடைவிடாமல் நடைபெற்ற வேன் பிரச்சாரத்தில் எல்லா இடங்க ளிலும் விவசாயிகள் திர ளாகப் பங்கேற்றனர்.

பிரச்சாரத்துக்குக் கிட்டிய மக்கள் ஆதரவைக் கவனித்த போலீசு, பொதுக்கூட்ட அனு மதியை இழுத்தடித்தது. உச்ச நீதிமன்ற உத்தரவைக் காட்டி நகரின் மையப் பகுதியில் கூட்டம் நடத்த அனுமதி மறுத்தது. இருப்பினும் ஏரா ளமான மக்கள் பொதுக்கூட் டத்தில் கலந்து கொண்டனர். போலி கம்யூனிஸ்டு கட்சி களின் அணிகள் ஏராள மானோர் வந்திருந்தது குறிப் பிடத்தக்கது.

பொதுக்கூட்டத்தில் சிறப் புரையாற்றிய உசிலை வட்ட வி.வி.மு. தோழர் சிவகாமு, பசுமைப் புரட்சியில் தொடங்கி இன்றுவரை ஏகாதிபத்தியங்களின் இலாபப் பசிக்கு விவசாயிகள் பலியாக்கப்படுவதை அனுபவப்பூர்வமான உதாரணங்களிலிருந்து எடுத்து விளக்கினார். ஆத்திரத்தைத் தூண்டு கின்ற இத்தகைய சுரண்டலும் அடக்குமுறையும் போர்க்குணமிக்க போராட்டங்களைக் கோரும் போது, சிரிக்கும் போராட்டம், அழும் போராட்டம், விளக்கு பிடிப்பது, மொட்டை போடுவது, அரை நிர்வாணப் போராட்டம் என உழைக்கும் மக்களை போலி கம்யூ னிஸ்டுகள் மேலும் கேவலப்படுத்துவதை அம்பலப்படுத்தினார், தோழர் காளியப்பன்.

"நாங்கதாங்க மார்க்சிஸ்டுகள், இத எந்தக் கோயிலில சத்தியம் செய்ய..." "அஞ்சுக்கு ஒருமுறை எலக்சனு... அறுவடைக்கறுவடை கலெக்சனு" என்ற ம.க.இ.க. கலைக்குழுவின் பாடல் போலி கம்யூ னிஸ்டுகளுக்கெதிரான ஏளனக் கூச்சலை மக்களிடம் தோற்றுவித் தது. கீழத்தஞ்சை கம்யூனிஸ்டுப் போராளிகளின் தியாகத்தைக் கொள்முதல் செய்து கொண்ட போலிகளிடமிருந்து அதன் மரபு ரிமை பறிமுதல் செய்யப்படும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித் தது திருவாரூர் மேநாள் பேரணி.

## நெய்வேலி

### "பொதுத்துறையைத் தனியார் மயமாக்காதே!"

ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய்க்கு மேல் இலாபமீட்டுகின்ற நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தையும் அனல் மின் நிலையங்க ளையும் தனியாருக்கு விற்பது என்ற பேச்சு தொடங்கியவுடனேயே நெய்வேலி தொழிலாளர்களும் அதிகாரிகளும் போராட்டத்தில் இறங்கினார்கள். மறுகாலனியாக்கத்திற்கு எதிரான போராட்டமாக இது வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதைத் தொழிலாளி வர்க்கத்திடம் அறைகூவியது நெய்வேலி மே நாள் நிகழ்ச்சி.

நெய்வேலியில் தொடங்கி சென்னை வரையிலான வட மாவட் டங்களில் ஏப்ரல் மாதம் முழுவதும் விரிவான பிரச்சாரம் நடைபெற் றது. குறிப்பாக, நெய்வேலி நகரியத்தில் ஒரு வீடு பாக்கியில்லை என்று கூறுமளவு வீடு வீடாகப் பிரச்சாரம் கொண்டு செல்லப்பட் டது. "என்ன செய்வது... தனியார்மயத்தைத் தடுப்பது கடினம்" என்று அடியறுப்புப் பிரச்சாரம் செய்த பாரதீய ஜனதாவின் சிறு கும்பலைத் தவிர, தொழிலாளர்கள் அனைவரின் ஆதரவையும் பெற்றிருந்தது இப்பிரச்சாரம். பொதுக்கூட்டத்திற்கு முன் நடை பெற்ற பேரணி, நகரியத்தின் எல்லாப் பகுதிகளையும் தழுவி 9 கி.மீ தூரம் நடந்து சென்றது.

பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய பொதுத்துறை நிறுவன அதிகாரிகள் சங்கக் கூட்ட மைப்பின் பொதுச் செயலர் அசோக்ராவ், தனியார்மய மென்பது வெறும் பொருளா தாரக் கொள்கை அல்ல வென்றும், இது மறுகாலனி யாக்கம் என்றும் நிறுவினார். (உரையின் சுருக்கம் இந்த இதழில் வெளியிடப்பட்டுள் ளது)

அடுத்துப் பேசிய புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலர் தோழர் சுப.தங்கராசு புதிய போராட்ட முறைகளின் தேவையை வலியுறுத்தினார். பேருந்துத் தொழிலாளர் போராட்டத்தின் தோல்வியைச் சுட்டிக்காட்டி,

திருவாரூரில் நடந்த மே தினப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் தோழர் காளியப்பன்.






படிப்பகம்



**போலீசின் தடையை மீறி ஈரோட்டில் நடந்த அந்நியத் துணி எரிப்புப் போராட்டம்.**

பேருந்து ஓடாவிட்டால் எதிரி கண்டு கொள்ள மாட்டான் என்றால், ''கார்கள் ஓடாது, எதிரி இயங்க முடியாது'' என்ற நிலையை ஏற்ப டுத்த வேண்டும் என்று விளக்கினார். மக்கள் சர்வாதிகார மன்றம் எனும் மாற்று அதிகார அமைப்பின் தேவையை வலியுறுத்தினார்.

''கல்வி தனியாரு, கரண்டு கூடத் தனியாரு, கார் பஸ்சும் தனி யாரு, கழண்டு கிட்டான் சர்க்காரு'' எனும் ம.க.இ.க. கலைக்கு ழுவின் பாடல், எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் கழன்று கொண்ட இந்த ஆளும் வர்க்கம், அதிகாரத்திலிருந்தும் கழற்றி விடப்பட வேண்டும் என்று புரட்சியை முன் மொழிந்தது.

வை.கோ.வின் தூது, வாஜ்பாயின் பொய் வாக்குறுதி ஆகிய எதுவும் நெய்வேலியைக் காப்பாற்றப் போவதில்லை. நெய்வே லியை உருவாக்கிய தொழிலாளர்களின் கரங்கள்தான் நெய்வே லியைப் பாதுகாக்க முடியும். இந்தப் போராட்டம் மறுகாலனியாக் கத்திற்கெதிரான மக்கள் எழுச்சிக்கு ஒரு உந்து விசையாக, எதிரிக்கு ஒரு தடையரணாக விளங்க வேண்டும் என்ற கடமையை தொழி லாளர்க்கு உணர்த்தியது நெய்வேலி மே நாள் கூட்டம்.

## ஈரோடு

## ''கைத்தறி, விசைத்தறித் தொழில்களை அழிக்காதே''

விவசாயத்திற்கு அடுத்தபடியாக, தமிழகத்தில் ஏறத்தாழ ஒன்னேகால் கோடி மக்களுக்குச் சோறு போடுவது நெசவுத் தொழில். உலகமயமாக்கத்தால் பேரழிவைச் சந்தித்து வரும் தொழிலும் இதுதான்.

பஞ்சு, நூல் ஏற்றுமதி - இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கம், கைத்தறி விசைத்தறிகளுக்கான சலுகை பறிப்பு, இறக்குமதித் துணிகள் மீதான வரிக்குறைப்பு ஆகியவற்றால் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இத்தொழிலின் கழுத்தில் சுருக்குக் கயிறு போல விழுந்தது - சிட்டா நூலுக்கு மத்திய அரசு விதித்திருக்கும் கூடுதல் கலால் வரி. இதற்கெதிராகத் தறித் தொழிலாளர்களும் முத லாளிகளும் போராடிய போதிலும் வரி ரத்து செய்யப்படவில்லை.

ஏற்றுமதி ஆர்டரில்லை, சீசன் டல்லாக உள்ளது, கூடுதல் வரி விதிப்பு - என்று அவ்வப்போதைய பிரச்சினைகளையே தொழிலின் அழிவுக்கான காரணமாக எண்ணி மயங்கிக் கொண்டி ருக்கிறார்கள் நெசவாளிகள். ''மறுகாலனியாக்கத்தை அமல்ப டுத்தும் இந்தக் கைக்கூலி அரசுக்கு ஒரு கோடித்துணியைப் போர்த்தாதவரை தறித் தொழிலாளர்கள் வாழ முடியாது'' என்பதை எடுத்துக் கூறியது ஈரோடு, கோவை, கரூர், சேலம், தர்மபுரி மாவட் டங்களில் நடந்த மே தினப் பிரச்சாரம்.

ஈரோடு, சென்னிமலை, காங்கேயம், திருப்பூர் பகுதிகளில் திரும்பிய இடமெல்லாம் சுவரெழுத்துக்கள்; ஈரோடு, திருப்பூர் உள்ளிட்டு அவ்வட்டாரம் முழுவதும் ஏப்ரல் மாதம் முழுவதும் எல்லாப் பேருந்து நிலையங்களிலும் பிரச்சாரம், ஈரோடு - பள்ளிப்பாளையம் நெசவாளர் குடியிருப்புகளில் ஒரு வாரம் வீடு வீடாகப் பிரச்சாரம் என ஏப்ரல் மாதம் முழுவதும் புரட்சிகர அரசி யலின் பிரச்சாரம் அவ்வட்டாரத்தில் செல்வாக்கு செலுத்தியது. கோவைக்கு அடுத்து திருப்பூரைக் கலவர பூமியாக்கும் நோக்கத் துடன் அங்கே அயோத்தி கோயிலுக்கு நிதிவசூல் செய்த இந்து முன்னணிக் கும்பல், எமது பிரச்சாரக் குழுவினரைக் கண்ட போதெல்லாம் பம்மிப் பதுங்கினர். பிரச்சினைக்கு நாம் முன் வைக்கும் தீர்வுகளால் கவரப்பட்ட தறி முதலாளிகள் சங்கத்தினர், இத்தீர்வுகளை ஆதரித்துத் தமது கூட்டத்தில் பேசினர்.

ஏப்ரல் 29-ம் தேதி ஈரோடு நகரில் நடைபெற்ற தொடர் முழக்க ஆர்ப்பாட்டமும் மாலையில் போலீசு தடையை மீறி நடத்தப்பட்ட அந்நியத் துணி எரிப்புப் போராட்டமும் ஆயிரக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றது. பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 20 தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

''தறி மூச்சு அடங்குது, எதிர்காலம் மயங்குது - தாரில்லாம நாடா தன்னந்தனியா ஓடுது'' - என்ற ம.க.இ.க. கலைக்குழுவின் பாடல் நெசவாளர்களின் ஓலத்தை, உள்ளக் குமுறலை மே நாள் பொதுக்கூட்ட மேடையில் ஒலித்தது.


பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய தோழர் சீனிவாசன், தறித்தொழிலின் அழிவுக்குக் காரணம் மறுகாலனியாக்கக் கொள்கைகளேயன்றி தர வீழ்ச்சியல்ல என்பதை நிறுவினார். எதி ரிகள் திரிக்கும் சரடை நூல் நூலாகப் பிரித்து அம்பலப்படுத்திய பின், தொழிலாளர்களும் சிறு முதலாளிகளும் சேர்ந்து போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

அடுத்து உரையாற்றிய தோழர் அரசு, ஏகாதிபத்திய உலகமய மாக்கத்திற்கெதிராகப் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்று வரும் போராட்ட அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகளைச் சுட்டிக் காட்டினார். பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முறியடிக்க, தனியார் முதலாளிகளுக்கு அரசு இலவசமாக டீசல் கொடுத்திருக்கிறது; தொழிலாளர்கள் பயணச் சீட்டு இல்லாமல் இலவசமாக மக்களைப் பயணம் செய்ய அனும திக்கும் புதிய போராட்ட உத்திக்கு மாறியிருக்க வேண்டும் என்றார். இழப்பதற்கு ஏதுமற்ற மக்களிடமிருந்து பொடா போன்ற சட்டங்கள் எதையும் பறிக்க முடியாதென்றும், நாம்தான் ஆட்சிபதி காரத்தைப் பறித்தெடுப்பதற்கான களத்தைத் தயார் செய்ய வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

மறுகாலனியாக்கத்திற்கெதிராக மூன்று மையங்களில் நடத்தப் பட்ட இந்த மே தின ஆர்ப்பாட்டம், வருங்காலத்தில் தவிர்க்க இய லாமல் எழவிருக்கும் மக்கள் போராட்டங்களைச் சரியான அரசி யலில் திசையில் செல்லத் தூண்டும் என்றால் மிகையாகாது.

**- பு.ஜ. செய்தியாளர்கள்**

**மே தினப் பிரச்சார இயக்கத்தையொட்டி திருச்சியில் நடந்த ஆர்ப்பாட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

# "தனியார்மயமும் தாராளமயமும் மறுகாலனியாக்கம்தான்!"

## — தோழர் அசோக்ராவ்

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைத் தனியாருக்கு விற்று விடுவதற்குத் திரைமறைவு சதி வேலைகள் நடந்துவரும் வேளையில் அந்நகரில் தொழிலாளர் தினத்தன்று "பொதுத்து றையை தனியாருக்கு விற்காதே" என்ற முழக்கத்தை முன் வைத்து, ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தை நடத்தின. கிட்டத்தட்ட 1500-க்கும் அதிகமான தோழர்களும், உழைக்கும் மக்களும் கலந்து கொண்ட இப்பொதுக் கூட்டத்தில் தோழர். கே. அசோக்ராவ் சிறப்புரையாற்றினார்.

தோழர். கே. அசோக்ராவ், பொதுத்துறை நிறுவனமான பாரத மிகு மின் நிலைய நிறுவனத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். இவர், மைய அரசின் பொதுத்துறை நிறுவன அதிகாரிகள் சங்கங்களின் தேசியக் கூட்டமைப்பினுடைய பொதுச் செயலாளராகவும், மின் ஆற்றலுக்கான தேசியக் குழுவின் கன்வீனராகவும் செயல்பட்டு வருகிறார்.

பொதுத்துறை நிறுவனங்களைப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், தரகுப் பெரு முதலாளிகளுக்கும் விற்று வரும் இந்திய அரசின் மறுகாலனியக் கொள்கையை எதிர்த்துப் போராடி வரும் அசோக்ராவ், "தனியார்மயமாக்கம் - ஒரு தேசத் துரோகம்" என்ற குறுநூலின் ஆசிரியருமாவார். இந்தக் குறுநூலை "பெல் - பைப்பிங் சென்டர் ஸ்டாஃப் யூனியன்" தமிழில் மொழி பெயர்த்து 1995-இல் வெளியிட்டுள்ளது.

"அரசின் கட்டுப்பாடிலுள்ள மின்துறையைத் தனியார்மயமாக்குவது ஏகாதிபத்தியங்களின் திட்டமிட்ட சதி. மின்துறை தனியார்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தனியார்மயம் பெரும் தோல்வியை அடைந்திருப்பதோடு, அம்மாநில மக்களின் மீது பெரும் சுமையை ஏற்றி வைத்து விட்டது" என ஆதாரங்களோடு விளக்கப் பேசிய அவர், "ஏகாதிபத்தியங்களின் இச்சதியை முறியடிக்க தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும்" என்றும் பொதுக்கூட்டத்தின் மூலம் அறைகூவல் விடுத்தார்.

மின்துறை தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து அவர் ஆற்றிய உரை, இப்பகுதியில் சுருக்கமாக, அதே சமயம் சாரம் அற்றுப் போகாமல் பு.ஜ. வாசகர்களுக்காகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

**அன்பார்ந்த உழைக்கும் மக்களே!**

இந்தியா, தமிழ்நாடு, நெய்வேலி நிலைமைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் நாம் உலக நிலைமைகளைப் புரிந்து கொண்டு துவங்க வேண்டும். அதே நேரம், மற்றவர்கள் இதைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சிறப்புரையின் மையமான விசயத்திற்குப் போகும் முன், மூன்று பேருடைய குரலை, அவர்களுடைய கருத்துக்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலாவதாக, பிரிட்டன் பிரதமர் டோனி பிளேயரின் ஆலோசகரான திரு. ராபர்ட் ஹூப்பர் கூறுகிறார்: "19-ம் நூற்றாண்டில் நிலவிய காலனியாதிக்கத்தின் தேவையும் அதற்கான வாய்ப்பும் இப்போதும் - எப்போதும் இருந்து வருகிறது. இப்போது புதுவகையான காலனியாதிக்கம் தேவைப்படுகிறது. இந்தப் புதுவகை காலனியாதிக்க உலகை நிர்வகிக்கவும் செயல்படுத்தவும் உலகளாவிய அமைப்புகளான உலக வங்கி, ஐ.எம்.எஃப் தேவைப்படுகிறது"

ராபர்ட் ஹூப்பர் சொல்வது ஒன்றும் புதிதல்ல. இது ஏற்கனவே நமது நாட்டில், கிராமப்புறங்களில் பண்ணையார்களும் கந்து வட்டிக்காரர்களும் கடன் கொடுக்கையிலும் குத்தகைக்கு விடும்போதும் இதைத்தான் செய்கின்றனர். கந்து வட்டிக்காரனும் பண்ணையாரும் நமது வாழ்வைத் தீர்மானிப்பது போல உலக வங்கியும் ஐ.எம்.எஃப்பும்.

இந்தக் கடன்காரர்கள்தான் இந்தியாவின் - ஏழைநாடுகளின் - பொருளாதாரத்தையும் நடவடிக்கைகளையும் தீர்மானிக்கின்றனர். இந்தியாவுக்கும் இது போன்ற ஏழை நாடுகளுக்கும் உலக வங்கி 3 நிபந்தனைகளை விதிக்கிறது.

1. கட்டுப்பாடுகளை நீக்கு, சட்டங்கள், விதிகளை அகற்று.

2. பண மதிப்பைக் குறை.

3. தனியார்மயமாக்கு.

தற்போது பொதுத்துறை நிறுவனங்களை; தனியார்மயமாக்குவது யாருடைய உத்தரவின்பேரில் நடக்கிறது என்றால் உலக வங்கி உத்தரவின் பேரில் நடக்கிறது.

இரண்டாவதாக, ரிச்சர்ட் ஹாஸ், இவர் அமெரிக்க அரசு செயலரான காலின் பாவெலின் வெளி விவகாரக் கொள்கை ஆலோசகர். இவர் கூறுகிறார்: "மூன்றாம் உலக நாடுகளின் இறையாண்மை வரம்புக்குட்பட்டது. ஒரு நாடு தீவிரவாதத்துக்கு ஆதரவு தருவதாக, அமெரிக்காவின் நலன்களுக்கு எதிராகச் செயல்படுவதாக நாங்கள் கருதினால் அந்நாடுகளில் தலையிட எமக்கு (அமெரிக்காவுக்கு) உரிமை இருக்கிறது."

ஆப்கனிலும் பாலஸ்தீனத்திலும் இந்த அமெரிக்க உரிமை எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நாம் பார்த்துள்ளோம். தீவிரவாத எதிர்ப்பு என்ற பெயரால் கருணையில்லாத குண்டு வீச்சினால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதை நாம் அறிவோம்.

மூன்றாவதாக, ஜியார்ஜ் சோராஸ், பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த இவர், அந்நியச் செலாவணி நாணய மதிப்பு ஊக மதிப்பீட்டாளர். நம்மூர் ஹர்சத் மேத்தாவைப் போல ஆயிரம் ஹர்சத் மேத்தாவிற்குச் சமமானவர். இவர் முதலாளித்துவ அமைப்பை ஒரு காலனியாதிக்கப் பேரரசுடன் ஒப்பிடுகிறார்.

பழைய காலனியாதிக்கத்தில் கலெக்டர் இருந்தார். கொடியும் பிற கெடுபிடிகளும் இருந்தன. செல்வம் அவர் மூலம் கொள்ளையடிக்கப்பட்டது. இப்போது அன்று போல காலனியக் கொள்ளைக்கு என கலெக்டர் இல்லை. ஆனால் செல்வம் மட்டும் கொள்ளை போகிறது.

மேற்கூறிய மூன்று பேருடைய குரல்களையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தியாவைப் பற்றிப் பேசும் முன் அர்ஜென்டைனா நாட்டைப் பற்றிப் பார்த்து விடுவோம்.

இந்த அர்ஜென்டைனா நாடானது லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே பணக்கார நாடாக இருந்தது. மிக நீண்ட காலமாக



படிப்பகம்

இது வளர்ந்த நாடா? வளரும் நாடா? என்பதுதான் கேள்வியாக இருந்தது.

இந்நாட்டிற்குள் புகுந்த உலக வங்கியின் உத்தரவுப்படி மின்சாரம், தொலைபேசி, சாலை, தண்ணீர் கூட தனியார்மயமாக்கப்பட்டது. தனது மிகச் சிறந்த மாணவன் அர்ஜெண்டைனா என உலக வங்கி புகழ்ந்தது. அந்நாட்டுப் பணமான பிசோவின் மதிப்பு ஏறக்குறைய அமெரிக்க டாலருக்கு இணையாக இருந்தது. உலக வங்கியின் கட்டளைகளுக்கு அடிபணிந்த பின் இந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

ஏன் இப்படியானது? அந்நாடு உலக வங்கி கட்டளையின்படிதான் தலைக்கு மேல் கடன் வாங்கியது. உலக வங்கி திட்டங்களை மிகச் சரியாக நிறைவேற்றியது. இதனால் கடனைத் திருப்பித் தருவதற்கான வருவாய் இல்லாமல் போனது. இப்பொழுது உலக வங்கியும் கடன் தர மறுத்து விட்டது. வேறு யாரும் பணம் தருவதாகவுமில்லை. நாடே திவாலாகி விட்டது.

பணமே இல்லாததால் எல்லா வங்கிகளையும் அரசு மூடிவிட்டது. மக்கள் தமது சிறு சிறு சேமிப்புகளை பாதுகாப்பு கருதி வங்கியில் போட்டு வைத்திருந்தனர். சேமிப்புப் பணத்தைத் திரும்பக் கேட்ட மக்களுக்குக் கடன் பத்திரம் தருவதாக அரசு கூறியுள்ளது. இக்கடன் பத்திர காகிதங்கள் வெறும் கழிப்பறை காகிதங்கள்தான் என உணர்ந்த மக்கள், இக்கடன் பத்திரங்களுடன் வங்கிகள் முன் கூடி சாப்பாட்டுத் தட்டு, கரண்டியை வைத்துக் கொண்டு தட்டிக் கொண்டுள்ளார்கள்.

கிட்டத்தட்ட இதே மாதிரியான பாதிப்புகள்தான் மெக்சிகோ, பிரேசில், தாய்லாந்து, இந்தோனேஷியா, தென்கொரியா முதலிய நாடுகளிலும் நிலவுகிறது.

தென் கொரியாவின் பொருளாதார நெருக்கடியால் மிகப்பெரிய தேவூ கார் ஆலை மூடப்பட்டது. அந்நாட்டிலுள்ள பொதுச் சொத்துக்களும் தனியார் சொத்துக்களும் விற்கப்படுகின்றன. தேவூ கம்பெனி பங்குகளை அமெரிக்காவின் 'ஜெனரல் மோட்டார்' நிறுவனம் வாங்குகிறது.

அர்ஜென்டைனாவில் கலகம் நடந்தால் என்ன? தென்கொரிய ஆலைகள் மூடப்பட்டால் என்ன என்று நாம் சும்மா இருக்க முடியுமா? இந்த நிலைமை நமக்கு ஏற்படாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஏனவே இப்பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உலக வங்கி, ஐ.எம்.எஃப் மூலம் உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளும்



**தனியார்மயம் என்பது மறுகாலனியாக்கம் என்பதை விளக்கிப் பேசும் தோழர் அசோக்ராவ் மற்றும் பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் தோழர் தங்கராசு.**

அவற்றின் பொருளாதாரமும் ஒரு சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளன என்பதே உண்மை. இந்த அடிப்படையினால்தான் இந்தியாவும் அதன் பொதுத்துறைகளில் ஒன்றான மின்துறையும் பாதிக்கப்படுகிறது.

நம் நாட்டிலுள்ள மின்துறையை என்ன செய்ய வேண்டும் என உலக வங்கி உத்தரவிட்டுள்ளது. இப்போதுள்ள மின்வாரியங்களை உற்பத்தி, அனுப்புவது, வினியோகம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து, அதன் பிறகு தனியாருக்கு விற்றுவிட வேண்டும் என்பது உலக வங்கி உத்தரவு.

இந்த உத்தரவுப்படிதான் ஒரிசா, ஆந்திரா, உத்தரப் பிரதேசம், அரியானா ஆகிய மாநிலங்களில் மின்வாரியம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது.

எஞ்சிய மாநில அரசுகளும் தங்களது மின்வாரியத்தை இதேபோல பிரித்துவிட வேண்டும் என உலக வங்கியும் மைய அரசும் வற்புறுத்துகின்றன. இப்படிச் செய்தால் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என மைய அரசும் உலக வங்கியும் வாதிடுகின்றன. இப்படி மூன்றாகப் பிரிப்பதால் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்பது உலக அளவில் ஏற்கப்படாத ஒன்றாகும்.

பிரான்சு நாடு தன் நாட்டிலுள்ள 'எலக்ட்ரிசிடி டி பிரான்சு' நிறுவனத்தை மூன்றாகப் பிரிக்க மறுத்து விட்டது.

நார்வே நாடும் மின்துறை போன்ற சேவைத் துறைகளைத் தனியார்மயமாக்க மறுத்துவிட்டது.

ஆனால் நமது மைய அரசு ''மின் மசோதா 2001'' என்கிற மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.

இம்மசோதா நிறைவேறினால் தற்போது நடைமுறையிலுள்ள மின்சட்டம் மாற்றப்படும். மின் சட்டம் - 1948, கடந்த 50 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான கிராமப்புறங்களுக்கும் மின்சாரம் என்பது அதன் சாதனை.

இப்போது புதிய சட்டம் வேண்டும் என்று சொல்கின்றனர். இதன் முக்கிய அம்சங்கள் என்னென்ன? மின்வினியோகத்தில் நகர்ப்புற மின்பிரிவு - கிராமப்புற மின்பிரிவு என இரண்டாகப் பிரிக்கிறார்கள்.

நகர்ப்புற மின்பிரிவு பன்னாட்டுக் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்படும். கிராமப்புற மின்பிரிவு பஞ்சாயத்து, கூட்டுறவு, அரசு சாரா அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும். இது ஏன் என எனக்குப் புரியவில்லை. எப்படி சாத்தியம் என்பதும் தெரியவில்லை.

நான் புரிந்து கொண்ட வகையில் இதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். கிராமப்புற மின்பிரிவுகள் இலவச மின்சாரம் காரணமாக நட்டத்தைத் தரும். நட்டம் தரக் கூடியதை எந்தத் தனியாரும் விரும்பமாட்டார்கள். அதனால்தான் அதைப் பஞ்சாயத்து, கூட்டுறவு, அரசு சாரா அமைப்புகள் தலையில் கட்டுகின்றனர். லாபம் தரக்கூடிய நகர்புற மின்பிரிவுகளைப் பன்னாட்டுக் கம்பெனிகளிடம் தருகிறார்கள்.

நிலைமை இப்படியே போனால் கிராமப்புற மின்சாரமும் விவசாயமும் என்ன கதியாகும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்.

மேலும் உள்மானியங்களை (Cross Subsidy) தரக்கூடாது என்கின்றனர். தமிழ்நாடு மின்வாரியம் ஆலைகளுக்கும் இரயில்வேக்கும் கூடுதல் விலையில் மின்சாரத்தை விற்கிறது. இதில் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டுதான் வீடுகளுக்கும் விவசாயத்திற்கும் குறைந்த விலையில் விற்கின்றனர். இதுதான் மானியம் தரப்படுவதன் உள்விவரம். இதை ஒழிக்க வேண்டுமென்கிறார்கள்.

மிகவும் அபாயகரமாக மற்றொரு பிரிவும் உள்ளது. மின் சட்டத்தின் 165வது பிரிவின்படி மின்கட்டண நிலுவை இருந்தால் அது வீட்டுவரி கட்டாததற்குச் சமமாகும்.

www.padippakam.com



**பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து நெய்வேலியில் நடந்த ஆர்ப்பாட்ட பேரணி.**

மின்கட்டணம் கட்டாவிட்டால் மின்சாரம் துண்டிக்கப்படுவது மட்டுமல்ல; ஜப்தியும் செய்யப்படும்.

முன்பு காலனிய காலத்தில் இருந்த இதே ஜப்தி முறை, இப்போது இந்த மின் மசோதா - 2001 மூலம் மீண்டும் கொண்டு வரப்படும்.

மேலே சொன்ன மூன்று விசயங்களாலும் என்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதை ஒவ்வொரு விவசாயியும் புரிந்து கொள்ள வேண்டும். இது ஒட்டுமொத்த விவசாயத்தையும் விவசாயிகளையும் மரணக் குழியில் தள்ளிவிடும்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிற புதிய பொருளாதாரக் கொள்கை விவசாயத்தை அழித்து சின்னாபின்னமாக்கி விடும் என நான் அஞ்சுகிறேன். ஒரே நேரத்தில் 5 திசைகளில் விவசாயம் தாக்கப்படுகிறது.

1. மின் சீர்திருத்தம் என்ற பெயரில் இந்திய விவசாயத்திற்கு மின்சாரம் எட்டாக்கனியாகும்.

2. வங்கிகள் தனியார்மயமாதல் காரணமாக கிராமப்புற வங்கிகள் மூடப்பட்டு அதன் காரணமாக கடன் வசதி நிறுத்தப்படும்.

3. அறிவுச் சொத்துடைமை திருத்தப்படுகிறது. விதைகள் அனைத்தும் மான்சாண்டோ போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் கைகளில் ஒப்படைக்கப்படும்.

4. பெட்ரோலியம், உரங்களின் விலைகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதால் டீசல் விலை ஏற்றப்படும். டீசல் பம்புகளை இயக்குவது அதிக செலவு ஏற்படுத்தும்.

5. அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் எல்லா பொருட்கள் மீதான அளவுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. இதனால் நமது விவசாயிகள் அந்நிய நாட்டு நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டி இருக்கும்.

மின் சீர்திருத்தங்கள் வெற்றி பெற்றுள்ளனவா?

மின்துறையில் திணிக்கப்படும் சீர்திருத்தங்கள் ஒட்டு மொத்தமாக தோல்வியடைந்துள்ளது. மகாராட்டிர மாநிலத்தில் என்ரான் நிறுவனம் ஒரு யூனிட் மின்சாரம் கூட தயாரிக்கவில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை நாடு இழந்துள்ளது. இந்த என்ரானுக்குக் கடனுதவி வழங்கிய ஐ.டி.பி.ஐ. என்கிற அரசு தொழில் துறை வங்கி, யூனிட் டிரஸ்ட் நிறுவனம் போலவே திவாலாகிற நிலைமை உருவாகி உள்ளது.

ஆந்திரா போன்ற மாநிலங்களில் உருவாக்கப்பட்ட தனியார் மின் நிறுவனங்கள் ஒரு 1 யூனிட் மின்சாரம் தயாரிக்க ஆகும் செலவு ரூ. 6/-

ஒரிசாவில் தயாரிப்பு உட்பட மின்சார வினியோகம் தனியாருக்கு தரப்பட்டுள்ளது. இதனால் 1 யூனிட் மின்சாரத்தின் விலை ஏற்கனவே இருந்ததை விட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

'அமெரிக்கன் எனர்ஜி சர்வீஸ்' என்கிற அமெரிக்க நிறுவனம் ஒரிசா தலைநகர் புவனேசுவர் மற்றும் கட்டாக் பகுதிகளுக்கு மின்சாரம் தர வேண்டும். ஆனால் நட்டம் எனக் காரணம் கூறி மூடப்பட்டு விட்டது. ஒழுங்குமுறைக் கமிட்டியானது நீதிமன்றம் செய்வது போல, ஒரு அதிகாரியை (Receiver) அனுப்பி நிறுவனத்தைப் பொறுப்பெடுத்து நடத்துகிறது.

ஒரிசா மாநில அரசு ஆறு ஆண்டுகளாக தனியாரிடம் தரப்பட்ட மின்நிறுவனங்கள் செயல்பாடு பற்றி உயர்மட்டக் கமிட்டி மூலம் ஆய்வு செய்தது. இக்கமிட்டி கண்டறிந்த உண்மைகள்:

★ தனியார் நிறுவனங்கள் மின் நிறுவனத்தை நடத்த மூலதனமே (பணம்) கொண்டு வரவில்லை.

★ நல்ல நிர்வாகத் திறமையோ, வேலையில் ஈடுபாடும், எதார்த்த நிலை பற்றிய அறிவும் கொண்ட நிர்வாகப் பணியாளரையோ தனியார் நிறுவனம் கொண்டு வரவில்லை.

★ வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தவில்லை.

★ பராமரிப்பு வேலைகளை முற்றாகப் புறக்

**தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துக் கலகம் செய்யும் அர்ஜெண்டினா மக்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

கணித்துவிட்டனர்.

✱ மின் திருட்டைக் குறைக்கவில்லை. மின்கட்டண வசூலை மேம்படுத்தவில்லை.

✱ கிராமப்புற மின்மயமாக்கல் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டது.

உயர்மட்டக் கொண்ட கமிட்டியின் அறிக்கை தனியார்மயத்தின் விரிவான தோல்வியைப் பறைசாற்றுகிறது.

இதையெல்லாம் மீறித்தான் மின்துறையை, என்.எல்.சி போன்ற திறன் மிக்க நிறுவனங்களைத் தனியாருக்கு விற்க வேண்டும் என கூச்சல் போடுகின்றனர். எந்த ஒரு புத்திசாலியும் இதை எதிர்த்துக் கேட்காமலா இருப்பான்?

உலக வங்கியின் முன்னாள் தலைமைப் பொருளாதார வல்லுனரும் 2001-ஆம் ஆண்டின் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு பெற்றவருமான ஜோசப் ஸ்டிக்லெட்ஸ் என்பவர் இதற்குப் பதில் கூறுகிறார். ''மூன்றாம் உலக நாடுகளில் தனியார்மயம் என்பது இலஞ்ச ஊழல் மயம் என்பதுதான்.''

நெய்வேலியிலிருந்து தொடங்கிப் பார்த்தாலே அவர் சொன்னதன் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை கூறுகிறது: நெய்வேலியில் 'ஜீரோ யூனிட்டின் ஒப்பந்தம் பற்றி முடிவு செய்யப் பட்ட போதே, வெளிநாட்டில் வாழும் ஒரு இந்தியர் (NRI), மின்சாரம் பற்றியே தெரியாத அவர் - ரியல் எஸ்டேட் அதிபர் - இந்தியாவுக்கு வந்தார். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரது சிபாரிசுக் கடிதத்துடன் வந்தார். 24 மணி நேரத்தில் என்.எல்.சி. நிர்வாகம் தன்னிடம் ஜீரோ யூனிட்டைத் தொடங்கப் பணம் இல்லை எனவும், எனவே அதை வெளிநாட்டில் வாழும் இந்திய முதலாளியிடம் ஒப்படைப் பதாகவும் அறிவித்தது. ஒரே வாரத்தில் எல்லா தேவையான விசயங்களையும் சுரங்க அமைச்சகம் செய்து முடித்து விட்டது.'

இன்றைய தேதிவரை ஒரு மின் தயாரிப்பு நிலையம் கூட இங்கில்லை. ஒரு யூனிட் மின்சாரம் கூட தயாரிக்கப்பட வில்லை.

ஜோசப் ஸ்டிக்லெட்ஸ் சொன்ன மாதிரி இலஞ்ச ஊழல்மயமாதல்தான் இதற் கெல்லாம் காரணம். இல்லையானால் எதுவும் நடந்திருக்காது.

எனவே, தொழிலாளர்களே, நாட்டுப் பற்று கொண்டோரே, இலஞ்ச ஊழல்ம யத்தில் உயிர்வாழும் தனியார்மயத்தை எதிர்த்துப் போராடுவதுதான் நம்முன் உள்ள ஒரே ஒரு வழி!

●

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, ஒரு மக்கள் ஜனநாயகப் புரட்சி செய்யப் போவதாக பம்மாத்து செய்வதற் காக அதன் 1964 கட்சித் திட்டத்துடன் கூடவே 1951-இல் ஒன்றுபட்ட கம்யூ னிஸ்டு கட்சி நிறைவேற்றிய ''கொள்கை அறிவிக்கை'' என்கிற ஆவணத்தையும் அச்சிட்டு பின் இணைப்பாக விற்பனை செய்து வந்தது.

இந்த ''1951 கொள்கை அறிவிக்கை'' தான் அக்கட்சியின் புரட்சிப் பாதையை வரையறுத்துத் தருவதாகவும் கூறி வந்தனர். 2000-ஆம் ஆண்டு டிசம்பர் - திருவனந்த புரம் சிறப்பு மாநாடு கூட்டி மேம்படுத்தப் பட்ட கட்சித் திட்டம் ஒன்றை நிறைவேற் றிய சி.பி.(எம்) கட்சி, அத்துடன் அந்த ''1951 கொள்கை அறிவிக்கை''யைச் சேர்த்து அச்சிடவில்லை. வழக்கமான அந்தச் சடங்கை நிறைவேற்றாமல் போன தற்கு அப்போது எவ்வித விளக்கமும் தரப் படவில்லை; அதற்கு எவ்வித ''ஆட்சே பணை'' - எதிர்ப்பும் எழுப்பப்படவில்லை. காகிதத்தில் மட்டுமே இருந்து வந்த சி.பி.எம். கட்சியின் புரட்சிப்பாதை காணாமல் போனது குறித்து யாரும் வியப் படையவும் இல்லை. காரணம், புரட்சிப் பம்மாத்து செய்வதற்காக மட்டுமே இந்த 1951 கொள்கை அறிவிக்கை பயன்படுத் தப்பட்டு வந்தது. மற்றபடி, அதை அமலாக் குவதில் இரண்டு போலி கம்யூனிஸ்டு கட்சி களும் எப்போதும் அக்கறைப்பட்ட தில்லை.

2000-ஆம் ஆண்டு அக்டோபர் - திரு வனந்தபுரம் சிறப்பு மாநாட்டுக்குப் பிறகு இந்தக் கொள்கை அறிவிக்கை பற்றிய ஒரு பிரச்சினை எழுந்ததாகக் கூறும் சி.பி.(எம்) கட்சியின் பொதுச்செயலாளர், பின்வரு மாறு விளக்கமளிக்கிறார்.

''தெலுங்கானா (1946-48) ஆயுதப் போராட்டத்தை விலக்கிக் கொள்வதற்கு முன்பாகவே, இந்தியாவில் புரட்சி மேற்கொள்ள வேண்டிய பாதை குறித்து ஒன்றுபட்ட கட்சிக்குள் மூன்று தெளிவான வழிமுறைகள் தோன்றியிருந்தன. ஆந்திரா தோழர்கள் சீன மாடல் புரட்சியை ஆதரித்த அதே சமயம், சில தலைமைத் தோழர்கள் வேறொரு பாதையை முன் வைத்தார்கள்; அஜாய் கோஷ், டாங்கே, காட்டே ஆகியோர் ஒரு மூன்றாவது பாதையை முன் வைத்தார்கள். அப்போது சர்வதேச இயக்கத்தில் ஈடு இணையற்ற மதிப்பைப் பெற்றிருந்த சோவியத் ஒன்றியப் பொதுவு டைமைக் கட்சியுடன் ஆலோசனை கலப்ப தற்காக நால்வர் குழு ஒன்றைக் கட்சி அனுப் பியது. அஜாய் கோஷ், டாங்கே, ராஜேஸ்வ ரராவ், பசவ புன்னையா ஆகியோர் அந்தத் தூதுக் குழுவில் இருந்தனர். அக்குழு அங்கு நடத்திய விவாதத்தில் சில சமயங்களில் ஸ்டாலினும் சேர்ந்து கொண்டார். இறு தியில், நமது கட்சி சீனப் பாதையையோ, ருசியப் பாதையையோ பின்பற்றத் தேவை யில்லை; நாட்டில் நிலவும் பருண்மையான நிலைமையைக் கவனத்தில் கொண்டு இந்தியப் பாதையைப் பின்பற்றுவது என்ற முடிவு ஏற்கப்பட்டது.

''இது கட்சித் தோழர்கள் அனைவ ருக்கும் திருப்தி ஏற்படுத்துவதாகவும், அவர்களை ஐக்கியப்படுத்துவதாகவும் செய்தது; கட்சித் திட்டத்துக்கும் போர்த் தந்திர வழிக் கண்ணோட்டத்துக்கும் முக்கிய அச்சாணியாக இது விளங்கியது. இவை இரண்டும் மாநிலத்திற்கு இரண்டு பிரதிநிதிகள் வீதம் கலந்துகொண்ட தலைம றைவு சிறப்பு மாநாட்டில், கருத்து மாறுபா டின்றி நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து கட்சியின் 3-வது (மதுரை) மாநாட்டில் இந்த ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டன.'' (மக்கள் ஜனநாயகம், சி.பி.எம். கட்சி ஏடு ஏப். 29, 2002 பக்: 6)

இவ்வாறு ''1951 கட்சித் திட்டம்'' மற்றும் ''கொள்கை அறிவிக்கை'' உருவான பின்னணியை விளக்குகிறார் சுர்ஜித். ஆனாலும் இவ்விரு ஆவணங்களிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிக் கட்டம் என்றும் அப்போதைய யதார்த்த நிலை மைக்கு முரணாகவும் குறிப்பிடப்பட்டிருந் தது; எனவே, 1951 கட்சித் திட்டம் அதிகா ரபூர்வமற்ற முறையில் கைவிடப்பட்டது என்கிறார். 1964-இல் தனிக்கட்சி அமைந் தபின் திட்டத்தில் அந்தக் குறைபாடு களை யப்பட்டது, ''கொள்கை அறிவிக்கை''யில் ஒரு பத்தி அளவு விளக்கக் குறிப்பு சேர்க்கப்பட்டது என்கிறார் சுர்ஜித். இப்போது அந்தக் கொள்கை அறிவிக் கையைக் கைவிடுவதை மார்ச் 21, 2002 - ஐதராபாத்தில் நடந்த 17-வது கட்சிக் காங்கி ரசில் சுர்ஜித் அறிவிக்கிறார்.

''கொள்கை அறிவிக்கையை மேம்ப டுத்தும் பிரச்சினையை மத்தியக் கமிட்டி 2002 ஜனவரியில் விவாதத்துக்கு எடுத்துக் கொண்டது. 'அனைத்து போர் தந்திரப் பிரச் சினைகள் மற்றும் புரட்சிகர இயக்கத்தை


படிப்பகம்

www.padippakam.com

வளர்த்தெடுக்கும் பாதை குறித்து மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டம் பரிசீலித்துள்ளது' என்று அது முடிவுக்கு வந்தது. கொள்கை அறிவிக்கை முதன்முதலாக நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இப்போது போர்த்தந்திர வழி கண்ணோட்டத்தைத் தரும் ஒரு இணை ஆவணமாக மேம்படுத்தப்பட்ட திட்டத்தோடு அதை அமலாக்க முடியாது. உண்மையில், நமது உடனடி போர்த் தந்திரங்களை அவ்வப்போது வகுப்பதற்கு முன் வெவ்வேறு தளங்களின் நிலைமைகளை நாம் மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது.''

''கொள்கை அறிவிக்கை'' என்பது அவ்வப்போது மாறும் நிலைமைகளுக்கேற்ப உடனடி போர்த்தந்திரங்களை வகுப்பதை மட்டும் உள்ளடக்கி இருக்கவில்லை. சுர்ஜித்தே ஒப்புக் கொள்வதைப் போல ''போர்த்தந்திர வழிக் கண்ணோட்டத்தின்'' ஒரு பகுதியாகத்தான் ''கொள்கை அறிவிக்கை'' நிறைவேற்றப்பட்டது. அதாவது கட்சியின் நீண்டகால மூலஉத்தி எனப்படும் போர் தந்திரத்தையும், புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பாதையையும் அது கொண்டிருந்தது. இப்போது ''கொள்கை அறிவிக்கை''யை கைவிடும் போது கட்சி மேற்கொண்டிருந்த ''போர்த்தந்திர வழிக் கண்ணோட்டம்'' என்ன ஆனது. இவை நிறைவேற்றப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது; மேம்படுத்தப்பட்ட திட்டத்தோடு இவை அமலாக்க முடியாது என்றால் பழைய போர்த் தந்திர வழிக் கண்ணோட்டமும் கைவிடப்பட்டுவிட்டதா? 50 ஆண்டுகளாக இவை அமலாக்கப்பட்டதா? அதன் அனுபவம் என்ன?

போர் தந்திரப் பிரச்சினைகள் மற்றும் புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பாதை பற்றி மேம்படுத்தபட்ட திட்டம் பரிசீலித்துள்ளதாகக் கூறும் சுர்ஜித் பழைய போர்த்தந்திர வழிக் கண்ணோட்டமும் அதன் ஒரு பகுதியான கொள்கை அறிவிக்கையும் இரண்டாண்டுகளுக்குப் பிறகுதான் விவாதிக்கப்பட்டது என்கிறார். அதாவது பழைய போர் தந்திரப் பிரச்சினைகளையும், புரட்சிகர இபக்கத்தை வளர்த்தெடுக்கும் பாதையையும் பற்றி விவாதிக்காமலேயே புதியவற்றை விவாதித்து முடிவெடுத்துள்ளனர்.

சுமை வண்டி இழுக்கும் குதிரைக்கு முன்பாக புல்லுக்கட்டைக் காட்டி ஏய்ப்பதைப் போல சி.பி.(எம்) கட்சியும் ஒரு காலத்தில் புரட்சி செய்யும், அதற்கான கண்ணோட்டத்தையும், பாதையையும் அது தெளிவாக வகுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறி அணிகளை ஏய்ப்பதற்காக பயன்படுத்தி வந்தவைதான் இந்த போர்த்தந்திர வழிக் கண்ணோட்டமும் அதன் ஒரு பகுதியாக கொள்கை அறிவிக்கையும் ஆகும். இவற்றை ஒன்றுபட்டிருந்த, பிறகு பிளவுபட்ட போலி கம்யூனிஸ்டு



பி.சுந்தரய்யா

கட்சிகள் எவையும் அமலாக்கவில்லை.

அந்தக் கொள்கை அறிவிக்கை பின்வருமாறு கூறுகிறது. ''இரண்டாவது கட்சிக் காங்கிரசுக்குப் பிறகு, இந்தியப் புரட்சிகர இயக்கம் மேற்கொள்ள வேண்டிய பாதை பற்றி வேறுபாடுகளும் முரண்பாடுகளும் கட்சிக்குள் எழுந்தன. நமது போராட்டத்தில் முக்கிய ஆயுதம் ருசியாவில் நடந்ததைப் போன்று ஆலைத் தொழிலாளர்களின் பொதுவேலை நிறுத்தங்களும் அதைத் தொடர்ந்து நாடு தழுவிய ஆயுதமேந்திய பேரெழுச்சியும் அடங்கிய ஆயுதமாக இருக்கும் என்பது சில காலம் முன்மொழியப்பட்டது. பிறகு, சீனப்புரட்சியிலிருந்து தவறான பாடங்களைக் கற்றுக் கொண்டதன் அடிப்படையில் நமது நாடு சீனாவைப் போன்றதொரு அரைக்காலனியாதலால், சீனத்தில் நடந்ததைப் போன்று அதேவழியில் நமது புரட்சியும் முன்னேறும், அதாவது விவசாயிகளின் கொரில்லாப் போர்முறையை முக்கிய ஆயுதமாகக் கொண்டிருக்கும் என்கிற கோட்பாடு முன்வைக்கப்பட்டது.

''நகரங்களில் பொது வேலை நிறுத்தம் என்பதன் மீது நம்பிக்கை வைக்கும் முதலாவது பாதை, விவசாயிகளின் பாத்திரத்தைப் புறக்கணிக்கிறது; அதேசமயம், கொரில்லாப் போராட்ட முறை மீது

**சுமை வண்டி இழுக்கும் குதிரைக்கு முன்பாக புல்லுக் கட்டைக் காட்டி ஏய்ப்பதைப் போல, சி.பி.எம்., தன்னைப் புரட்சிகர கட்சியாகக் காட்டி அணிகளை ஏய்ப்பதற்காகவே ''போர்த்தந்திர வழி'', ''கொள்கை அறிவிக்கை'' என்றெல்லாம் இதுவரை பசப்பி வந்தது.**

நம்பிக்கை வைக்கும் அடுத்த பாதை, பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரத்தைச் சிறுமைப்படுத்துகிறது. இது நடைமுறையில் விவசாயிகள் தமது மாபெரும் நண்பனும் தலைவனுமாகிய பாட்டாளி வர்க்கத்தை இழந்து விடுவதைக் குறிக்கிறது. கோட்பாடு ரீதியாக மட்டுமே, கட்சியின் மூலம் மட்டுமே பாட்டாளி வர்க்கம் தலைவனாக இருக்க முடியும். ஏனெனில் கட்சி, பாட்டாளி வர்க்கக் கட்சி என்று சித்தரிக்கப்படுகிறது.

''இவ்விரு பாதைகளுமே நடைமுறையில் தேசிய ஐக்கிய முன்னணியின் அச்சாக தொழிலாளர்கள் - விவசாயிகள் கூட்டைக் கட்டும் பணியைப் புறக்கணிக்கின்றன; தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டும் பணியையே புறக்கணிக்கின்றன. விடுதலைப் போராட்டத்தில் இந்த முன்னணியின் தலைமையில் பாட்டாளி வர்க்கத்தை வைப்பதைப் புறக்கணிக்கின்றன.

''இது ஒரு தவறான அணுகுமுறை என்பதை உணரவேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையும் விவசாயிகள் போராட்டத்துக்கு அதன் தலைமையையும் கட்சியின் மூலம் மட்டுமே சித்தியடைவதில்லை. ஆனால் உண்மையில், நடைமுறையில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக துணிச்சலோடு பாட்டாளி வர்க்கம் குரல் கொடுப்பது மற்றும் தனது சொந்த நடவடிக்கையால் விவசாயிகள் போராட்டத்துக்கு உதவி செய்வது ஆகியவை மூலம்தான் அது சித்தியடைகிறது. கூட்டணி என்பது கோட்பாட்டில் மட்டுமல்லாது யதார்த்தத்திலும் நடைமுறையிலும் செயல்படுவதாக இருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கம் செயலில் நண்பனாகவும் போராட்டத்தில் விவசாயிகளுக்கு உதவுவதாகவும் இருந்து பொது எதிரிகள் மீதான வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும்.

''பாட்டாளி வர்க்கம் தொழிலாளர்கள் - ஏழை விவசாயிகளைச் சார்ந்து நின்று, விவசாயிகளோடு - ஒட்டுமொத்த மக்களுடன் உறுதியாகக் கூட்டுச்சேர்ந்து விடுதலைக்காகவும் நிலத்திற்காகவும் உணவுக்காகவும் வேலைக்காகவும் அமைதிக்காகவும் நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் யுத்தங்களுக்குத் தலைமையேற்க வேண்டும்.

''வரலாற்றின் இந்தப் பாடத்தை, ருசியப் பாதையோ சீனப்பாதையோ அல்லாது, இந்திய நிலைமைகளுக்குப் பிரயோகிக்கப்பட்ட ஒரு லெனினியப்பாதை என்கிற பாடத்தைத் தோழர்களுக்கு கையளிப்பதை மத்தியக் குழு விரும்புகிறது'' என்கிறது சி.பி.(எம்) கட்சியினுடைய போர்த் தந்திரவழிக் கண்ணோட்டத்தின் ஒரு பகுதியாகிய கொள்கை அறிவிக்கை.

சி.பி.(எம்) கட்சியின் நீண்டகால மூலவுத்தி எனப்படும் போர் தந்திரம் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பாதை என்ன? என்கிற கேள்விகள் எழுப்பப்படும்போது மேற்கண்ட ''போர்த்தந்திர வழிக் கண்ணோட்டம்'' அதன் ஒரு பகுதியாகிய கொள்கை அறிவிக்கையைத்தான் கூறி வந்தார்கள். இதன் உள்ளடக்கத்தைப் பார்க்கும்போது வெங்காயத் தோலை உரித்தாற் போன்று உள்ளே எதுவும் இல்லை என்பதை அறிகிறோம். சீனப்பாதையும் கிடையாது, ருசியப் பாதையும் கிடையாது என்கிறார்கள் சரி; வேறு என்ன பாதை? இந்திய நிலைமைகளுக்கு ஏற்ப லெனினியப் படிப்பினைகளையும், சீனப் புரட்சி, இரசியப் புரட்சி ஆகியவற்றின் அனுபவங்களையும் பிரயோகிக்கும் இந்தியப் பாதை என்கிறார்கள்.



**சி.பி.எம். கட்சியின் நவீன திருத்தல்வாத மும்மூர்த்திகள்: சுர்ஜித், ஜோதிபாசு மற்றும் மறைந்த இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு**

இப்படிக் கூறிவிட்டால் போதுமா? இவர்கள் குறிப்பிடும் படிப்பினைகளும் அனுபவங்களும் என்னென்ன? அவற்றை இந்திய நிலைமைகளுக்கு ஏற்ப எவ்வாறு பொருத்தினார்கள் என்கிற விவரங்கள் உள்ளனவா? எதுவுமில்லை. இப்படி மொட்டையாக இருக்கிறதே இதை வைத்துக் கொண்டு, இதுதான் இந்தியப் பாதை, புரட்சிகர இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பாதை என்கிறீர்களே, இது எப்படிச் சாத்தியம் என்கிற கேள்விகள் எழுப்பப்பட்டபோது அதற்கொரு விளக்கம் சொன்னார்கள். நகர்ப்புற ஆயுதந்தாங்கிய பேரெழுச்சியையும் கிராமப்புற விவசாயிகள் கொரில்லாப் போராட்டத்தையும் இணைப்போம் என்றார்கள். அதாவது குதிரையையும் மாட்டையும் ஒரே வண்டியில் பூட்டி ஓட்டப்போவதாகப் புளுகினார்கள்.

சி.பி.(எம்) கட்சி தனது கொள்கை அறிவிக்கையில் கூறியதைப் போல விவசாயிகளின் கோரிக்கைக்கு குரல் கொடுப்பது, விவசாயிகளின் போராட்டங்களுக்கு உதவுவது, விவசாயிகள் - தொழிலாளர்கள் கூட்டை அச்சாகக் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டுவது, இவற்றின் மூலம் விடுதலைக்காகவும் நிலம் மற்றும் உணவுக்காகவும் வேலை மற்றும் அமைதிக்காகவும் நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் யுத்தங்களுக்கு தலைமையேற்கும் வகையில் பாட்டாளி வர்க்கத்தை கடந்த ஐம்பதாண்டுகளில் எப்போதாவது சி.பி.(ஐ) - சி.பி.(எம்) கட்சிகள் வழி நடத்தியிருக்கின்றனவா? அதற்கான முயற்சியிலாவது ஈடுபட்டிருக்கின்றனவா?

நகர்ப்புறங்களில் தொழிலாளர்களையும், கிராமப்புறங்களில் விவசாயிகளையும் கட்சி அமைப்புகளில் திரட்டி, பொருளாதாரவாதக் கோரிக்கைகளுக்காக 1970-களின் மத்தியகாலம் வரை ஒரு சில பகுதிகளில் இயக்கங்கள் நடத்தினர். 1967 நக்சல்பாரி பேரெழுச்சிக்குப் பிறகு, சி.பி.(எம்) கட்சி அணிகள் தலைமைக்கு எதிரான கலகங்களைத் துவக்கியதால் ''நிலப்பறி இயக்கம்'' என்கிற கண்துடைப்புப் போராட்டம் நடத்தினர். விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டிக் கொண்டு போய் பண்ணை நிலங்களில் கொடிகளை நடுவதற்கு முயன்று, போலீசு வந்ததும் தாமே கைதாகி சிறைகளுக்குப் போவதும், அரசிடம் கெஞ்சி விடுதலையாவதும்தான் அவர்களின் நிலப்பறி இயக்கம்.

சி.பி.(எம்) தலைமையிலான நிலப்பறி இயக்கமும் நகர்ப்புற தொழிற்சங்கப் போராட்டங்களும் பிசுபிசுத்துப் போன அதேசமயம், இந்திராவின் அவசரகாலப் பிரகடனத்தோடு 20 அம்சத் திட்ட சீர்திருத்தங்களும் வந்தன. புரட்சிச் சவடால் அடித்து வந்த தலைமை, ஆளும் வர்க்கங்களிடம் சரணடைந்து, சமரசம் பேசி அப்போதே 1951 போர்த்தந்திர வழிக் கண்ணோட்டத்தையும் கொள்கை அறிவிக்கையையும் கைவிட்டு விட்டனர்.

1978-இல் சி.பி.(எம்) கட்சி நடத்திய ஜலந்தர் காங்கிரசும் அதைத் தொடர்ந்து நடந்த மேற்கு வங்கம் - சல்கியா பிளீனமும் சி.பி.(எம்) கட்சிக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அதுவரை கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த சுந்தரையா பதவி விலகினார். ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு பொதுச்செயலாளர் ஆனார். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய தொடர்ச்சியான நிலப்பரப்பில் வேலை செய்து இயக்கத்தை வளர்த்தெடுப்பது என்னும் சுந்தரையா பாதை நிராகரிக்கப்பட்டு, இந்தி பேசும் மாநிலங்களில் வேலை செய்து ஒரு இடது - ஜனநாயக முன்னணியைக் கட்டுவதன் மூலம் இயக்கத்தை வளர்த்தெடுப்பது என்கிற நம்பூதிரி சுர்ஜித் - ஜோதிபாசு பாதை மேற்கொள்ளப்பட்டது.



**சி.பி.எம். முட்டுச் சந்தில் மாட்டிக் கொண்டதை ஒப்புக் கொண்ட அக்கட்சியின் ஹைதராபாத் மாநாடு.**

ஆனால், 25 ஆண்டுகளுக்குப் பிறகு, சி.பி.(எம்) கட்சி அடைந்துள்ள நிலைமை பரிதாபகரமாகத்தான் உள்ளது என்று கடந்த மார்ச்சில் நடந்து முடிந்துள்ள கட்சியின் ஐதராபாத் மாநாடு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இன்று அக்கட்சி ஒரு முட்டுச் சந்தில் சிக்கித் திணறுவதை அப்பட்டமாக ஒப்புக் கொள்வதுதான் அம்மாநாட்டு அரசியல் அமைப்புத் தீர்மானமாகக் காண்கிறோம்.

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# வெனிசுலாவில் ஆட்சிக் கவிழ்ப்பு மூக்கறுந்த அமெரிக்கா!

வெனிசுலா - தென்னமெரிக்கக் கண்டத்தின் உச்சியில் அமைந்துள்ள, கரீபியன் கடலை ஒட்டியுள்ள சிறிய நாடு எண்ணெய் ஏற்றுமதியில் உலகின் நான்காவது இடத்தை வகிக்கும் முன்னணி நாடு. எண்ணெய் வளமிக்க நாடாக இருப்பினும் ஏகாதிபத்தியங்கள் - தரகுப் பெருமுதலாளிகளின் கொள்ளையால் வறுமை தாண்டவமாடும் ஏழை நாடு. அந்நாட்டில் கடந்த ஏப்ரல் 12-ஆம் தேதியன்று நடந்த திடீர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் அதிபர் ஹுகோ சாவெஸ் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

தென்னமெரிக்க நாடுகளில் திடீர் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடப்பதும், மீண்டும் புதிய வடிவில் இராணுவ சர்வாதிகாரம் தொடர்வதும் வழமையான நிகழ்வுகள்தாம். அமெரிக்க வல்லரசு யாரை ஆதரிக்கிறதோ அந்தக் கும்பல், அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி அதிகாரத்துக்கு வருவதும் வழக்கமான நிகழ்ச்சிதான். அந்த வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றாண்டுகளாகப் பதவியில் நீடித்து வரும் வெனிசுலா அதிபர் சாவெஸ், இராணுவ அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பில் தூக்கியெறியப்பட்டுள்ளார் என்றே பலரும் கருதினர். சிறையிடப்பட்டுள்ள அதிபர், கியூபாவில் அடைக்கலம் கேட்டுள்ளதாகவும், அந்நாட்டுக்குத் தன்னை அனுப்பிவிடுமாறு இராணுவத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் செய்திகள் வந்தன.

ஆனால் இந்த ஆட்சிக் கவிழ்ப்பு அடுத்த 28 மணி நேரத்துக்குள் படுதோல்வியடைந்தது. பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அதிபர் சாவெஸ், அடுத்த இருநாட்களிலேயே மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றார். இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்து ஊக்குவித்த அமெரிக்க வல்லரசுக்கு அதன் வாயிற்புறத்திலுள்ள ஏழை நாட்டிலேயே செருப்படி கிடைத்தது. வெனிசுலா நாட்டின் மக்கள் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கி அமெரிக்காவின் ஆதிக்கக் கனவுகளைச் சுட்டெரித்தனர்.

***

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பில் (OPEC) அங்கம் வகிக்கும் வெனிசுலா, சுழற்சி முறையில் கடந்த ஆண்டில் தலைமைப் பதவிக்கு வந்தது. அதிபர் சாவெஸ், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் சக நாடான ஈராக்கிற்குப் பயணம் மேற்கொண்டு எதிர்காலத் திட்டம் பற்றி அதிபர் சதாம் உசேனுடன் விவாதித்தார். ஈராக் - அமெரிக்காவால் பயங்கரவாத பூமியாகச் சித்தரிக்கப்பட்டுள்ள நாடு; சதாம் உசேன் - அமெரிக்காவின் எதிரியாக கருதப்படுபவர். ஈராக் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்து பழிவாங்கி தண்டித்து வருகிறது. இந்நிலையில், ஈராக்கிற்கு வெனிசுலா அதிபர் சாவெஸ் சென்ற விவகாரம் அமெரிக்காவுக்கு எரிச்சலூட்டியது. ஈராக் சென்ற அதிபர் சாவெஸ், ''சதாம் உசேன் சாத்தான் அல்ல; ஈராக் நரகமும் அல்ல'' என்று பேட்டியளித்தார். ஒரு ஏழை நாட்டு அதிபர் தன்னை மீறிச் செயல்படுவதோடு, தனது எதிரியையும் புகழ்வதைக் கண்டு அமெரிக்கா ஆத்திரமடைந்தது.

இது மட்டுமல்ல; அதிபர் சாவெஸ், ஆப்கான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை வெளிப்படையாகவே எதிர்த்தார். அமெரிக்க எதிர்ப்பாளரான கியூபா அதிபர் காஸ்ட்ரோவை தனது ஆசான் என்று போற்றி ஆதரித்தார். பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ள கியூபாவுக்கு சலுகை விலையில் எண்ணெய் கொடுத்து உதவினார். அண்மையில், கியூபாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் பாதிக்குமேல் சலுகை விலையில் தரவும் ஏற்பாடுகளைச் செய்தார்.

அதிபர் சாவெஸ், அமெரிக்க எதிர்ப்பை வெறும் வெளியுறவு விவகாரமாகச் சுருக்கிக் கொள்ளவில்லை. வெனிசுலாவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவியுள்ள அமெரிக்க மற்றும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கு எதிராகவும், அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு சமூக அடிப்படையாக உள்ள உள்நாட்டு தரகுப் பெருமுதலாளிகள் - நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை எடுத்தார்.

வெனிசுலாவின் கோடானுகோடி உழைக்கும் மக்கள் வறுமையில் தத்தளிக்கும்போது, எண்ணெய் வருவாயை விழுங்கி ஏப்பம் விட்டு வந்த ஏகாதிபத்திய-தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் தமது வருவாயில் குறிப்பிட்ட ஒரு பங்கை மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு கட்டாயம் ஒதுக்கவேண்டும் என்று சட்டமியற்றினார். ஏகாதிபத்திய எண்ணெய் நிறுவனங்கள் வெனிசுலாவுக்குச் செலுத்த வேண்டிய ''ராயல்டி'' கட்டணத்தையும் தீர்வைகளையும் உயர்த்தினார். அந்நிய கூட்டுப் பங்கு நிறுவனங்களில் அந்நிய ஏகபோக நிறுவனங்களின் முதலீடு 49%-க்கு மேல் இருக்கக் கூடாது என்று கட்டுப்பாடுகளை விதித்தார். இத்தகைய சட்டங்கள் - விதிகளால் ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத் தகர்க்க முடியாது. எனினும் இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டு பன்னாட்டு ஏகபோக எண்ணெய் நிறுவனங்களான எக்சான்மொபில், ஷெல், மிட்சுபிஷி ஆகியன ஆத்திரமடைந்து வெளிப்படையாகவே வெறுப்பை உமிழ்ந்தன.

வெனிசுலாவின் விளைநிலங்களில் 46%-ஐக் கைப்பற்றிக் கொண்டு மக்கட்தொகையில் 1% ஆக உள்ள நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையில், அதிபர் சாவெஸ் நிலச்சீர்திருத்தத்தை அறிவித்து உடனடியாக அதைச் செயல்படுத்துமாறு ஆணையிட்டார். ஆத்திரமடைந்த நிலப்பிரபுக்கள் கலகம் செய்ததோடு, கடந்த மூன்றாண்டுகளில் 100-க்கும் மேற்பட்ட கூலி - ஏழை விவசாயிகளைக் கொன்று அச்சுறுத்தினர். இதைக் கண்டு பீதியடையாமல், ''நகர்புற ஏழைகளே, கிராமங்களுக்குச் சென்று நிலங்களைக் கைப்பற்றுங்கள்; வெனிசுலாவை சுயசார்பான வளமான நாடாக மாற்றுங்கள்'' என்று அதிபர் சாவெஸ் மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். மக்கள் ஆதரவோடு நிலச்சீர்திருத்தத்தைச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார்.

இத்தகைய நடவடிக்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்த பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் தரகு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அதிபர் சாவெஸ்-ஐப் பதவியிலிருந்து தூக்கியெறிய கடந்த ஆண்டில் கூட்டுச் சதியில் இறங்கினர். எண்ணெய் விலை வீழ்ச்சியையும் தென்னமெரிக்கக் கண்டத்து நாடான அர்ஜெண்டினாவில்

அமெரிக்காவின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்து, மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்கும் ஹுகோ சாவெஸ்.






படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியையும் காரணம் காட்டி கலகங்களைத் தூண்டி விட்டனர். பத்திரிகை முதலாளிகள் அதிபர் சாவெஸ்க்கு எதிரான திட்டமிட்ட அவதூறு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். ஊழல் அதிகாரிகள் அதிபரின் உத்தரவுகளைச் செயல்படுத்த மறுத்து முட்டுக் கட்டை போட்டனர். பன்னாட்டு ஏகபோக எண்ணெய் நிறுவனங்களில் பணியாற்றும் மேட்டுக்குடி தொழிலாளர்களைப் பெருமளவில் திரட்டி வைத்துள்ள மஞ்சள் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு எண்ணெய் உற்பத்தியை முடக்கி நெருக்கடி கொடுத்தன.



ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்தும் எதிர்த்தும் தலைநகர் காரகாசில் நடக்கும் தெருச் சண்டை.

இத்துரோக தொழிற்சங்கங்களுக்கு அமெரிக்க தொழிற்சங்க சம்மேளனம் (AFL-CIO) மூலமாகவும் தேசிய ஜனநாயகக் கழகம் எனும் அமெரிக்க ஆளும் குடியரசுக் கட்சியின் துணை அமைப்பின் மூலமாகவும் கோடிக்கணக்கான டாலர்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன. எதிர்க்கட்சிகள் அதிபருக்கு எதிராக காலவரையற்ற போராட்டத்தைத் தொடர்ந்தன. அமெரிக்க ஆசியுடன் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது.

தொடரும் போராட்டங்களால் நாட்டில் அமைதியும் ஜனநாயகமும் சிதைந்து விட்டதாகக் கூறிக் கொண்டு, இராணுவ அதிகாரிகள் கவச வண்டிகளைக் கொண்டு ஏப்ரல் 12-ஆம் தேதியன்று அதிபர் மாளிகையை முற்றுகையிட்டனர். அதிபர் சாவெஸ் கைது செய்யப்பட்டு தனிமைத் தீவுச் சிறையில் அடைக்கப்பட்டார். தரகுப் பெருமுதலாளிகள் சங்கத் தலைவரும் வர்த்தகப் பெரும் புள்ளியுமான பெட்ரோ கார்மோனா என்பவர் புதிய அதிபராக அறிவிக்கப்பட்டார். இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக தலைநகர் காரகாசில் போராடிய மக்கள் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியது. 12 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். ஆனாலும் போராட்டம் ஓயவில்லை. அதிபர் சாவெஸை ஆதரித்து நகர்ப்புற ஏழைகளும் கிராமப்புற விவசாயிகளும் நாடெங்கும் போராடத் தொடங்கினர். ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரிக்கும் உயர் அதிகாரிகள் - எதிர்க்கும் கீழ்நிலை சிப்பாய்கள் என இராணுவமே பிளவுபட்டது. புதிய அதிபர் அவசர அவசரமாக நாடாளுமன்றத்தையும் நீதித்துறையையும் கலைத்துவிட்டு அனைத்து அதிகாரங்களையும் தன்கையில் குவித்துக் கொண்டு, அதிரடி உத்தரவுகளை அறிவித்ததும் அதிருப்தியும் கலகமும் நாடெங்கும் பெருகியது. புதிய அதிபரின் சர்வாதிகாரச் சட்டங்களைக் கண்டு பீதியடைந்த தொழிலாளர்கள் ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்தனர். வேறு வழியின்றி மஞ்சள் தொழிற்சங்கங்கள் ஆட்சிக் கவிழ்ப்புக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டன.

இந்த இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை அமெரிக்காவும் தென்னமெரிக்கக் கண்டத்தில் அதன் விசுவாச எடுபிடி நாடான கொலம்பியாவும் மட்டுமே ஆதரித்து நின்றன. மற்ற தென்னமெரிக்க நாடுகள் அனைத்தும் இச்சட்ட விரோத இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து நின்றன. பிரபல அமெரிக்க நாளேடான ''தி நியூயார்க் டைம்ஸ்'' அதிபர் சாவெஸ் பதவி விலகி ஓடி விட்டார் என்றும் அவர் ஒரு சர்வாதிகாரி என்றும் கூசாமல் புளுகியது.

ஆனால் ஏகாதிபத்தியவாதிகளின் மகிழ்ச்சியும், ஆரவாரமும் இரு நாட்கள் கூட நீடிக்கவில்லை. இராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கு எதிராக உள்நாட்டில் பெருகிய அதிருப்தி - கலகத்தாலும், அமெரிக்காவைத் தவிர அண்டை நாடுகள் கூட ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரிக்காததாலும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டு போன நிலையில், வேறு வழியின்றி அதிபர் சாவெஸை இராணுவம் விடுதலை செய்தது. 28 மணிநேரத்தில் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியடைந்து, சாவெஸ் மீண்டும் அதிபராகப் பொறுப்பேற்றார். ஆட்சிக் கவிழ்ப்பை ஊக்குவித்து ஆதரித்து நின்ற அமெரிக்க வல்லரசின் முகத்தில் கரிபூ சப்பட்டது.

இது வெனிசுலா மக்களின் ஜனநாயகப் போராட்டத்துக்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றி. இன்றைய வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளவும் நாளைய வெற்றியை அறுவடை செய்யவும் அதிபர் சாவெஸ் மேலிருந்து சீர்திருத்தச் சட்டங்களைப் போடுவதன் மூலம் மட்டுமே சாதித்து விட முடியாது. அதை புரட்சியின் மூலம் கீழிருந்து மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமே சாதிக்க முடியும்.

வெனிசுலா அதிபர் சாவெஸ் ஒரு முதலாளித்துவ ஜனநாயகவாதிதான்! தனது அதிகாரத்தைக் கொண்டு சட்டங்கள் - விதிகள் - கட்டுப்பாடுகளை மேலிருந்து நிறைவேற்றுவதன் மூலம் நாட்டின் சுயாதிபத்திய உரிமையைத் தற்காத்துக் கொள்ள முடியும் என்று நம்பும் கற்பனாவாத சீர்திருத்தவாதிதான்! அதேசமயம் உலகின் பல ஏழை நாடுகள் தனது கட்டளைக்கு விசுவாசமாக அடிபணிந்து கிடக்கும்போது, அதிபர் சாவெஸ் வரம்புக்குட்பட்ட அதிகாரத்தைக் கொண்டு சட்டங்கள் போட்டு தனக்கெதிராகச் செயல்படத் துணிந்து விட்டாரே என்ற ஆத்திரத்தில் அமெரிக்க வல்லரசு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் கீழ்த்தரமாக இறங்கியது. ஆனால் வெனிசுலா மக்களின் போராட்டத்தாலும், தென்னமெரிக்க கண்டத்து நாடுகளின் நிர்ப்பந்தத்தாலும் அதன் ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சிகள் படுதோல்வியடைந்து மூக்கறுபட்டு நிற்கிறது.

● தமிழ்மணி



படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

பூர்வமாகவும் ஈழத்தின் நிர்வாக அதிகாரத்தை விடுதலைப் புலிகள் பெறுவார்களேயானால் தமது குற்றங்களுக்காக ஜெயலலிதா போன்றவர்கள் தண்டிக்கப்படலாம். அதைவிட ஒரு நரகவேதனை, ஈழத்தின் தலைவராக இந்திய அரசே பிரபாகரனை அங்கீகரித்து, தமிழ்நாட்டிற்கே அதிகார பூர்வ பயணம் வரலாம். அவரை ஜெயலலிதாவே வரவேற்று உபசரிக்க வேண்டிய நிர்பந்தம் எழலாம்.

இத்தகைய சாத்தியப்பாடுகள், ஊகங்களை அரசியல் ஆலோசகர்கள் என்கிற பெயரில் சோ, மணிசங்கர் அய்யர், வெங்கிடராமன் போன்ற சகுனிகள் ஜெயலலிதா, சோனியா போன்ற பாசிஸ்டுகளின் காதுகளில் ஓதும்போது கள் குடித்த குரங்கு போல அவர்கள் ஆட்டம் போடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு எதிர்வினைதான் பிரபாகரனை ஆட்கொணர்வு செய்யக் கோரும் தீர்மானமாகும்.

இந்தச் சட்டப் பேரவைத் தீர்மானத்துக்குக் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவிக்கும்போதே வேறொரு கருத்தையும் புலிகளின் விசுவாசிகள் ஆதரவாளர்கள் பலரும் தெரிவித்துள்ளனர். எடுத்துக்காட்டாக, ''ஈழத்தமிழர் வாழ்வில் விடியல் ஏற்பட வாய்ப்புள்ள வேளையில், அதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில், அங்கே சமாதானம், தீர்வு ஏற்பட உதவுவதற்குப் பதிலாக, அதைப் பாழ்படுத்தும் நோக்கத்தோடு தமிழக சட்டப் பேரவையில் விடுதலைப் புலிகள் பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாள், துக்கத்துக்குரிய நாள் ஆகும்'' என்று வைகோ அறிக்கை விடுத்துள்ளார்.

''வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்தாற்போல் இலங்கையில் உருவாகிவரும் நல்ல சூழ்நிலையைக் கெடுக்கும் நோக்கத்துடனும், சமரசப் பேச்சினைச் சீர்குலைப்பதற்காக இலங்கை அதிபர் சந்திரிகா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்குத் துணை போகும் வகையிலும் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது'' என்று நெடுமாறன் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சி(!) கூட்டம் தீர்மானம் போட்டுள்ளது.



**''இடைக்காலத் தீர்வு'' என்ற பெயரில் மறுகாலனியாதிக்கத்துக்குப் பலியாகவுள்ள ஈழத் தமிழ் மக்கள்.**

இவற்றினூடாக விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கூறுவது இதுதான். தற்போது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம், இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடக்கும் அமைதிப் பேச்சு வார்த்தைகள் ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாக முடியும்; இதனால் ஈழத்தில் நிரந்தர அமைதியும், ஈழத் தமிழர் வாழ்வில் ஒரு விடியலும் ஏற்பட்டு விடும் என்கின்றனர். அதோடு பிரபாகரனுடைய இராணுவத் துறையிலான மேதாவிலாசம் மட்டுமல்ல, அரசியல் மற்றும் அரசு - தந்திரத் துறைகளினாலான மேதாவிலாசமும் புலப்படுகிறது என்று ஏகத்துக்கும் புகழ்கின்றனர்.

இந்தச் சமயத்தில் சில விடயங்களை இவர்கள் அனைவருமே மறக்கவும் மறைக்கவும் முயலுகின்றனர். கடந்த ஆண்டு, ''ஓயாத அலைகள்'' இராணுவ நடவடிக்கையைத் துவங்கி, யானையிறவு சண்டையில் வென்று, யாழ் வளைகுடா பகுதியில் முன்னேறி யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டனர். அப்போது குதூகலித்த புலிகளின் தமிழ் நாட்டு ஆதரவாளர்கள் இதுதான் இறுதிப் போர். புலிகளின் தாகம் தணியப்போகிறது. தமிழீழத் தாயகம் மலரும் நாள் நெருங்கி விட்டது என்று பிரகடனப்படுத்தினர். ஆனால், அந்த நாள் வராமலேயே போய்விட்டது; அவர்களின் கணிப்பும் பிழையாகிப் போனது.

ஈழத்தில் இழுபறிநிலைதான் நீடிக்கிறது, புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்குவது - அழிப்பது இலங்கை இராணுவத்துக்கு எப்படி இயலாத காரியமாக உள்ளதோ, அதேபோன்று, தமிழீழத்தை இராணுவ ரீதியாக வெல்வது புலிகளுக்கும் சாத்தியமற்றதாக உள்ளது. நீண்டகாலப் போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளில் ஒரு சமயத்தில் ஏதாவது ஒன்றின் கை மேலோங்கி இருக்கும். ஆனால், இதுவே யுத்த தந்திர வகையில் இறுதி வெற்றிக்கான அறிகுறியாகி விடாது என்று ''புதிய ஜனநாயகம்'' ஏடு எழுதியது.

ஈழத்தில் வாழும் இசுலாமியர்கள் அனைவரும் இனத் துரோகிகள் என்று முத்திரைக் குத்தி, ஈழத்தை இனத் தூய்மைப் படுத்தும் வகையில் நாள் குறித்து வெளியேறிவிடும்படி புலிகள் கட்டளை பிறப்பித்தனர். மசூதிக்குள் தொழுகை நடத்திக் கொண்டிருந்த இசுலாமியர்கள் மீது குண்டு மாறிப் பொழிந்து படுகொலை செய்து, பீதி கிளப்பி ஈழத்தில் இருந்து விரட்டியடித்தனர். அவர்கள் வீடு-வாசல் இழந்து அகதிகளாகி இன்னமும் முகாம்களில் வாழ்கின்றனர். புலிகளின் பாசிசத் தன்மைக்கு இது இன்னுமொரு எடுத்துக்காட்டு என்று ''புதிய ஜனநாயகம்'' ஏடு கூறியது.

ஆனால், புலி ஆதரவாளர்கள் மௌனம் சாதித்தனர் அல்லது போர்க்காலத்தில் ஸ்டாலின் மேற்கொண்ட நடவடிக்கையோடு ஒப்பிட்டு நியாயப்படுத்தினர். இசுலாமியர்கள் விசயத்தில் அப்போது புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைக்கு வருந்துவதாகவும், இப்போது இசுலாமியர்கள் ஈழம் திரும்பி வழமையான வாழ்க்கை நடத்துவதை உறுதி செய்வதாகவும் புலிகள் கூறுகின்றனர்.

அதேபோல, ''சிங்கள - தமிழ் மக்களிடையே தீராத பகை முரண்பாடு ஏற்பட்டு விட்டது. இனி, ஈழத் தமிழினம் தனித்தேசமாகப் பிரிந்து போவதைத் தவிர வேறு தீர்வே கிடையாது.'' ''புலிகளின் தாகம், தமிழீழத் தாயகம் என்பதன் பொருள் தனித் தமிழீழம் அடைவதுதான். அதற்குக் குறைவான தீர்வு கூறுவதும் ஏற்பதும் ஈழத் தமிழினத் துரோகமாகும்'' என்று புலி ஆதரவாளர்கள் வாதிட்டனர். புலிகளை ஆதரிக்காதவர்கள் ஈழத்தை ஆதரிப்பவர்களாக இருக்க முடியாது. அதேபோல ஈழத் தமிழின சுயநிர்ணய உரிமை கோரிக்கையை ஆதரித்தால் மட்டும் போதாது; தனி ஈழத்தை ஆதரிக்காதது ஈழ விடுதலையை ஆதரிப்பதாகாது என்றும் குற்றஞ்சாட்டினர்.

ஈழத் தமிழின சுயநிர்ணய உரிமைக்



படிப்பகம்

www.padippakam.com

காகப் போராடுவதை ஆதரிக்கிறோம். இதுவே ஈழ விடுதலையை ஆதரிப்பது தான். தனி ஈழமா, இல்லையா என்பது ஒரு நீண்டகாலப் போராட்டத்தில், இலங்கையின் அரசியல் பொருளாதார, சமூக வளர்ச்சிப் போக்கில் தீர்மானிக்கப்படும். ஈழ விடுதலைப்போரின் துவக்கத்தில் சிங்கள - தமிழின மக்களிடையே நிலவும் பகை முரண்பாடு அப்படியே மாறாமல் நிலவும் என்பது தவறானது. சிங்கள ஆளும் வர்க்கங்கள் - கட்சிகளிடையே பிளவுகளும் முரண்பாடுகளும் தோன்றி, அரசியல், பொருளாதார சமூக நெருக்கடிகள் முற்றி நிலைமைகள் மாறலாம். எனவே தனி ஈழமா, இல்லையா என்பது சுயநிர்ணய உரிமையை அடைந்த பிறகுதான் தீர்மானிக்கப்படும் என்று ''புதிய ஜனநாயகம்'' ஏடு முடிவுக்கு வந்தது. இப்படிச் சொல்வதை ஈழத் தமிழினத் துரோகம் என்று புலி ஆதரவாளர்கள் சாடினர்.

ஆனால், இன்றோ, ''வெண்ணெய் திரண்டு வருகிறது'' ''ஈழத் தமிழர் வாழ்வில் விடியல் ஏற்படப் போகிறது'' ''ஈழத் தமிழினப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு வருகிறது'' ''ஈழத் தமிழ்ச் சமுதாயம் நிரந்தர அமைதி காணப் போகிறது'' என்று புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் கூறுகின்றனர்.

இதுவரை புலிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் என்ன கூறிவந்தார்கள். வைகோவும் இராமதாசும் மாநாடுகள் கூட்டிப் பிரகடனப்படுத்தியது என்ன? ''தனித் தமிழீழம்தான் ஒரே தீர்வு. ஈழத் தமிழ்தேசம் தனி அரசை நிறுவும்போதுதான் ஈழத் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறை முடிவுக்கு வரும். அப்போதுதான் ஈழத்தமிழர் வாழ்வில் விடியல் ஏற்படும். ஈழத் தமிழின சமுதாயம் நிரந்தர அமைதி காண முடியும்'' என்றுதானே கூறி வந்தார்கள்!

இப்போது, காலால் நடந்தவன் தலையால் நடக்க முயல்வதைப் போல எல்லாவற்றையும் புரட்டிப் பேசுகிறார்கள், புலிகள். ஈழத் தமிழினப் பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளி வைத்துவிட்டு, ஈழ மக்களின் பொருளாதார, வாழ்வியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை



**விடுதலைப் புலிகளின் ஒற்றை ஆதிக்கத்திற்காக பிற ஈழத் தமிழ்க் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.**

முதன்மைப்படுத்துகிறார்கள்.

''முதலில் எமது மக்களின் பொருளாதார வாழ்வு மேம்பட வேண்டும். எமது மக்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழவேண்டும். அமைதி நிலை நிரந்தரமாக நிலையானதாக இருக்க வேண்டும். சர்வதேசக் கண்காணிப்புக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனது குழுக்களை அமைத்துக் கண்காணிப்பு வேலையைச் செய்ய வேண்டும். அதற்கப்புறம் எமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டால் பேச்சுக்களில் பங்குபெற நாம் தயாராக இருக்கிறோம்'' என்கிறார் பாலசிங்கம்.

அப்போதும்கூட ஈழத் தமிழினப் பிரச்சினை குறித்து அரசாங்கமும் புலிகளும் பேசப் போவதில்லை. சிங்கள இனம் ;

**அதிகாரத்தைச் சுவைக்கக் காத்திருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன்.**



அரசு தரப்பில் எவரும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஏற்று ஒரு நிரந்தரத் தீர்வை முன் வைக்கத் தயாராக இல்லை. ''ஆகவேதான் நிரந்தரத் தீர்வை நோக்கி இப்பொழுது பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி, பேச்சு வார்த்தைகள் குழம்பி, அது இறுதிப் போராக மாறுவதை நாம் விரும்பவில்லை. ஆகவேதான் ஓர் இடைக்காலத் தீர்வை, இடைக்கால அரசை நாங்கள் கேட்க விரும்புகிறோம். அவர்களும் அதைத் தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்'' என்கிறார் பாலசிங்கம்.

எப்படிப்பட்ட இடைக்கால அரசு, எதற்காக இந்த இடைக்கால அரசு என்பது பற்றியும் பாலசிங்கம் விளக்கியுள்ளார். ''தற்போது ஏற்படுத்திக் கொண்டுள்ள அமைதி ஒப்பந்தம் இன்னுமொரு இரண்டு அல்லது மூன்றாண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்று இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் முடிவு செய்துள்ளனர்.''

''இதை நீடிப்பது என்று சொன்னால் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும். அந்த நிர்வாகக் கட்டமைப்பில் சிவில் நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்த அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து பேண முடியும்.''

''இந்த இடைக்கால அரசு அமைக்கப்பட்டு வடகிழக்கின் நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டால் உலக நாடுகள் வடகிழக்கில் ஏகப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பெருமளவு உதவி வழங்கத் தயாராக இருக்கின்றன. இது எமக்கு நேரடியாகச் சொல்லப்படுகின்றது.''

''வடக்கு கிழக்கில் அதாவது தமிழர் தாயகம் போரினால் சிதைந்து போய்க் கிடக்கிறது. சகல கட்டிடங்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மீளப் புனரமைத்துத் திருத்திக் கட்டியெழுப்ப எமக்கு ஏகப்பட்ட நிதி உதவி தேவை. இந்த நிதியுதவியைச் செய்வதற்கு உலகத்திலுள்ள முன்னேறிய நாடுகள் முன்வந்திருக்கின்றன.''

''ஆகவே, இப்படியான சூழலில் சமாதானத்தை




படிப்பகம்

www.padippakam.com

நீடித்து, சமாதானச் சூழலைத் தொடர்ந்து கடைப்பிடித்து, இடைக்கால நிர்வாக அரசைப் பொறுப்பேற்று இந்த நிதி உதவியைப் பெற்று எமது மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்த நாம் முடிவு செய்திருக்கிறோம். ஆகவே நீங்கள் நினைக்காதீர்கள் நீண்ட காலத்திற்கு நீடிக்காதென்று.''

''சரி, இடைக்கால அரசு இன்னும் மூன்று நாலு மாதத்தில் வரும். புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் சென்று அரசியல் கட்டமைப்புக்களைப் போட்டு தங்களுடைய அரசியல் விரிவாக்கத்தைச் செய்வார்கள். நிர்வாக ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள். அதற்குப் பிறகு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்ற ரீதியில் தமிழீழம் முழுக்க புனர்நிர்மாணம் செய்வதற்கான வேலைகளை பொறுப்பு ஏற்பார்கள். அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவோம்.''

''இப்படியான சூழ்நிலையில் நாங்கள் இடைக்கால நிர்வாக ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் போதுதான் நிரந்தர தீர்வு பற்றி நாங்கள் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறோம்.'' (தென்செய்தி, இதழ் எண்: 08, பக்:4)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கேயுடன் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட்ட தெற்காசியப் பகுதிக்கான அமெரிக்க அரசின் துணைச் செயலர் கிறிஸ்டினா ரோக்கா.

இங்கே நிரந்தரத் தீர்வு என்பதற்கு பாலசிங்கம் ஒரு விளக்கம் தருகிறார். ''எங்களுடைய இலட்சியம் தமிழீழத் தனியரசு. இந்தத் தமிழீழத் தனியரசை அரசு ஏற்றுக் கொள்ள விரும்பாத பட்சத்தில், அரசாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கட்டும். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற இந்த மூன்று அடிப்படைகளை ஏற்றுக் கொண்ட ஒரு தீர்வுத் திட்டத்தை சிங்கள தேசம் முன்வைத்தால், நாங்கள் அதைப் பரிசீலனை செய்வோம்'' என்று நீண்ட விளக்கமளிக்கிறார் பாலசிங்கம்.

இந்த நீண்ட விளக்கத்தில் இருந்து அறிவது என்னவென்றால், பாலஸ்தீனத்தில் அராபத் தலைமையில் இடைக்கால அரசு நிர்வாகத்தை நிறுவிக் கொள்வதற்கு இசுரேல் ஒப்புக் கொண்டதைப் போல, பிரபாகரன் தலைமையில் ஈழத்தில் ஒரு இடைக்கால அரசு நிறுவனத்தை நிறுவிக் கொள்வதற்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், பாலஸ்தீனமும் ஈழமும் ஒன்றல்ல. பாலஸ்தீனத்தில் இருப்பது அராபத் தலைமையில் சில குழுக்களின் கூட்டணியும் அதற்கு வெளியே சில போராளிக் குழுக்களும் உள்ளன. ஈழத்திலே விடுதலைப் புலிகள் மட்டுமே ஆயுதமேந்திய ஏகபோகக் குழு, பிற போராளிக் குழுக்கள் இயங்கவே முடியாத நிலை. இலங்கை அரசு, இசுரேல் அரசு அளவுக்கு இராணுவ - ஆயுதபலமும், ஏகாதிபத்திய ஆதரவும் பெற்றதல்ல. இந்தச் சாதகமான கூறுகளை வைத்து அராபத் போன்று நெருக்கடியில் சிக்கிக் கொள்ளாமல் சமாளித்து விடலாம் என்று புலிகள் கணக்குப் போடுகின்றனர்.

சிங்கள பெருந்தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து அமைதி வழியில் ஈழத் தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சி என்கிற பெயரில் ஈழத்தை ஏகாதிபத்திய வல்லரசுகளின் மறுகாலனியாக்குவதற்குதான் பிரபாகரனும் பாலசிங்கமும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

போருக்குப் பிந்திய நாடுகளைப் புனரமைப்பது, தொழில் - பொருளாதார முன்னேற்றங்களை ஏற்படுத்துவது, இதற்காகத் தொழில் நுட்பம், முதலீடுகள், கடன் - நிதி உதவி என்கிற பெயரில் நுழையும் ஏகாதிபத்திய வல்லரசுகளும், பன்னாட்டுத் தொழில் கழகங்களும் விரைவிலேயே தமது மேலாதிக்கத்தை நிறுவி அந்நாடுகளை மறுகாலனியாக்கி வருவதை உலகெங்கும் காண்கிறோம். விரைவான தொழில் முன்னேற்றம், அதற்காக உலகமயமாக்கம் என்கிற படுகுழிக்குள் ஈழத்தை வீழ்த்துவதற்கு பிரபாகரன் - பாலசிங்கம் கும்பல் ஏற்பாடு செய்கின்றனர்.

வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்களில் கணிசமான அளவு மூலதனத்தைச் சேர்த்துள்ள புலி ஆதரவு தரகு முதலாளிகள் உள்ளனர். அவர்களும், சிங்களத் தரகு முதலாளிகளும் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு, ஈழம் உலகமயமாக்கலுக்குத் திறந்து விடப்படுவதை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இப்போதே ஈழத்தில் தொழில், முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்ச்சிகளில் தரகு முதலாளியப் பொருளாதார நிபுணர்கள் இறங்கிவிட்டனர்.

அடிப்படையில் டிராட்ஸ்கியவாதியான ஆண்டன் பாலசிங்கம் கூறுகிறார், ''இது ஒரு முக்கியமான விடயம். எமது பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை அல்ல; வன்னிக்குள் அல்லது யாழ்ப்பாணத்துக்குள் ஒரங்கட்டப்பட்ட பிரச்சினை அல்ல. இன்று ஒரு சர்வதேசப் பிரச்சினையாக, உலக வல்லரசுகளினதும், பிரதேச வல்லரசுகளினதும் கவனத்தை, அக்கறையை, தலையீட்டைக் கொண்டுள்ள ஒரு சிக்கலான உலகப் பிரச்சினை; சர்வதேச நெருக்கடி. ஆகவே நாங்கள் குறுகிய நோக்குடன் காய்களை நகர்த்தவில்லை. சகல சர்வதேச பரிமாணங்களையும் கணக்கிலெடுத்து அவற்றின் தாற்பரியங்களை உணர்ந்து சர்வதேச உறவுகளை ஆழமாகப் பரிசீலனை செய்து ஒவ்வொரு காய்களையும் நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.'' (ஆதாரம், தென்செய்தி, இதழ் எண்: 08, பக்: 4)

இப்போது, ''நாங்கள் எமக்கென்று ஒரு மொழி, எமக்கென்று வரலாற்றுப் பிரதேசம், எமக்கென்று பொருளாதார வாழ்வு, எமக்கென்று கலாச்சாரம் - இப்படியான பல்வேறு அம்சங்கள் கொண்ட ஒரு தேசிய இனமாக தேசிய கூட்டமைப்பைக் கொண்ட மக்களாக வாழ்ந்து கொண்டு வந்தபடியால் எமது பிரச்சினையை வித்தியாசமான முறையில் அணுக வேண்டும்'' என்கிறார் பாலசிங்கம்.

ஆனால், உலக வல்லரசுகளினதும், பிரதேச வல்லரசுகளினதும் கவனத்தை, அக்கறையை, தலையீட்டை அங்கீகரித்து ஏற்பதன் மூலம் ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பிரதேசம், பொருளாதார வாழ்வு, மொழி, கலாச்சாரம் ஆகிய தேசிய இன அடையாளங்கள் அனைத்தையும் அழிப்பதற்கு விடுதலைப் புலிகள் வழி வகுத்துள்ளனர். ●



படிப்பகம்

### பஞ்சாப் சி.பி.எம். கட்சியில் பிளவு:

# புரட்டல்வாத சாக்கடையில் இன்னுமொரு புழு!

புரட்சி செய்யப் போவதாகப் பம்மாத்து செய்து கொண்டு, இடதுசாரி ஒற்றுமை பற்றி உபதேசித்து வரும் போலி கம்யூனிஸ்ட் கட்சியான சி.பி.எம்., பஞ்சாப் மாநிலத்தில் இரண்டாகப் பிளவுபட்டுப் போயுள்ளது. பஞ்சாபில் அதிகாரபூர்வ சி.பி.எம். கட்சியை எதிர்த்து மங்கட்ராம் பஸ்லா என்பவர் தலைமையிலான குழுவினர், ''நாங்கள்தான் உண்மையான சி.பி.எம். கட்சி'' என்று கூறிக்கொண்டு தனித்து இயங்கி வருகின்றனர்.


பஸ்லா குழுவினர் கடந்த ஜனவரியில் ஜலந்தர் நகரில் மிகப்பெரிய பேரணியுடன் மாநாடு நடத்தியுள்ளனர். இது, சங்ரூர் நகரில் சி.பி.எம் நடத்திய மாநாட்டுப் பேரணியை விட எண்ணிக்கையில் அதிகமானதாக இருந்துள்ளது. ஏறத்தாழ 70% சி.பி.எம் கட்சி அணிகளை தம்பக்கம் வைத்துள்ளதாகக் கூறும் பஸ்லா குழுவினர், கடந்த பிப்ரவரியில் நடந்த பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் 11 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டனர். பார்வர்டு பிளாக், லிபரேஷன் குழு ஆகியவற்றுடன் இணைந்து பா.ஜ.க. - அகாலி கூட்டணியையும் காங்கிரசையும் எதிர்த்து தேர்தல் பிரச்சாரம் செய்தனர். ஒரு இடத்தில் கூட வெற்றி பெறாத போதிலும், பஸ்லா குழுவினர் பிளவுபட்டு தனித்து இயங்குவதால் அதிகாரபூர்வ சி.பி.எம் கட்சியானது, அதன் பொதுச் செயலாளர் சுர்ஜித்தின் சொந்த மாநிலமான பஞ்சாபில் முடமாகிக் கிடக்கிறது. இப்பிளவுக்குக் காரணம் என்ன?

''கட்சித் திட்டத்தை மாறிய நிலைமைகளுக்கேற்ப திருத்தியமைப்பது என்ற பெயரில் கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளையே சி.பி.எம். கைகழுவி விட்டது. பெருநிலப்பிரபுக்களின் நிலங்களை நட்டஈடின்றிப் பறிமுதல் செய்வது என்ற முந்தைய நிலைப்பாடு கைவிடப்பட்டு, அவசியமான விவகாரங்களில் நட்டஈடு தருவது என்ற புதிய திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களின் மூலதனம் மற்றும் சொத்துக்களை நட்ட ஈடின்றிப் பறிமுதல் செய்வது என்பது கைவிடப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அந்நிய ஏகாதிபத்திய முதலீட்டை அனுமதிப்பது என்று மாற்றப்பட்டுள்ளது. ஏகபோக முதலாளிகளின் ஆலைகள் மற்றும் சொத்துக்களை அரசுடைமையாக்குவது என்ற நிலைப்பாடு கைவிடப்பட்டு, அவற்றின் மீது அரசின் கட்டுப்பாடு நீடிக்கும் என மாற்றப்பட்டுள்ளது.

''வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் உழைக்கும் மக்களுக்கு இடைக்கால நிவாரணமளிக்கவும் மாநில அளவில் கூட்டணி அரசாங்கங்களில் பங்கேற்பதைப் பற்றி கட்சித் திட்டத்தின் 112-வது பத்தி குறிப்பிடுகிறது. ஆனால் இந்த பத்தியானது மாநில அரசாங்கங்களில் மட்டுமின்றி மைய அரசாங்கத்திலும் பங்கேற்பதைப் பற்றி குறிப்பிடுவதாக சி.பி.எம். தலைவர்கள் புதிய வியாக்கியானம் அளிக்கின்றனர். மைய அரசாங்கத்திலும் அமைச்சர்களாகப் பங்கேற்கும் வர்க்க சமரசப் பாதையை 1957-இல் வலது கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கி வைத்தது. இத்துரோகப் பாதையை மறுதலித்து புரட்சிப் பாதையைப் பின்பற்றுவதாகக் காட்டிக் கொண்ட சி.பி.எம். கட்சியும் அதே துரோகப் பாதையில்தான் செல்கிறது.

''எல்லாவற்றுக்கும் மேலாக, பாசிச வகுப்புவாத பா.ஜ.க. கூட்டணியை அதிகாரத்திலிருந்து விரட்டுவது; இடதுசாரி ஜனநாயக - மதச்சார்பற்ற மூன்றாவது அணியைக் கட்டியமைப்பது என்ற கட்சியின் அரசியல் வழி கைவிடப்பட்டு, சந்தர்ப்பவாத வழியே நடைமுறைப்படுத்தப்படுகிறது. பா.ஜ.க. - காங்கிரசுக்கு மாற்றாக மூன்றாவது அணியைக் கட்ட எந்த முயற்சியுமின்றி, காங்கிரசுக்கு வால் பிடித்துச் செல்வதே கட்சியின் கொள்கையாகிவிட்டது.

''இவையனைத்திற்கும் சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளராக தொடர்ந்து நீடித்து வரும் திருவாளர் சுர்ஜித்தான் முதன்மைக் காரணம். அவர் வர்க்கப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதைப் புறக்கணித்து விட்டு, ஓட்டுக் கட்சிகளிடையே தரகு வேலைகளில் மூழ்கிக் கிடக்கிறார். ஆளும் வர்க்கக் கட்சிகளுடன் கூடிக் குலாவுகிறார்'' என்று அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுகளை அள்ளிவீசி தமது பிளவுக்கு விளக்கமளிக்கின்றனர், பஸ்லா குழுவினர்.



மங்கட்ராம் பஸ்லா, நேற்றுவரை சி.பி.எம். கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினராகவும் பஞ்சாப் மாநிலக் கமிட்டி செயலாளராகவும் இருந்தவர். இதுநாள்வரை சி.பி.எம்.மின் துரோகத்தைப் பற்றி வாய் திறக்காமல் இருந்த இவர், கடந்த நான்காண்டுகளாக கட்சியின் வர்க்க சமரசப் பாதையை எதிர்த்துப் போராடி வந்ததாகவும், கட்சித் தலைமையானது இவற்றைப் பரிசீலிக்காமல் தம்மைப் புறக்கணித்து விட்டு விசுவாச கும்பல்களை ஊட்டி வளர்த்ததாகவும் இப்போது தன்னிலை விளக்கமளிக்கிறார்.

அதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும், ''சி.பி.எம்.மின் துரோகப் பாதையை எதிர்ப்பதாகக் கூறும் நீங்கள் முன்வைக்கும் மாற்று புரட்சிப் பாதை என்ன?'' என்று இவர்களிடம் கேட்டால், ''நாங்கள்தான் உண்மையான சி.பி.எம்.'' என்கிறார்கள். ''அதுதான் துரோகக் கட்சியாயிற்றே!'' என்றால், ''இல்லையில்லை; சி.பி.எம். உருவான போது 1964-இல் வகுக்கப்பட்ட கட்சித் திட்டம் மிகச் சரியானது; அதை நாங்கள் உயர்த்திப் பிடிக்கிறோம். அதைச் சரியாகச் செயல்படுத்தினால் புரட்சியைச் சாதித்து விட முடியும். தற்போதைய சி.பி.எம். திட்டம்தான் துரோகத்தனமானது'' என்கின்றனர். குட்டியாக இருந்தபோது கழுதை அழகாகத்தான் இருந்தது; வளர்ந்த பிறகுதான் இப்படியாகி விட்டது; எனவே நாங்கள் கழுதைக் குட்டியைத்தான் ஆதரிக்கிறோம் என்கிறார்கள்.

ஆனால் 1964-ஆம் ஆண்டின் சி.பி.எம் கட்சித் திட்டம்தான் நவீன திரிபுவாதத்துக்கு அடிப்படை. அந்தக் கட்சித் திட்டத்தின்படிதான் சி.பி.எம். சந்தர்ப்பவாதத்திலும் துரோகத்தனத்திலும் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறியது. அந்தத் திருத்தல்வாத திட்டத்தை இன்னமும் முட்டுக் கொடுத்து தாங்கிக் கொண்டிருக்கும் பஸ்லா குழுவினரின் புரட்சிக் கனவு பகற்கனவாகவே முடியும் என்பதில் சந்தேகமில்லை. முட்டுச் சந்தில் சிக்கிக் கொண்ட சி.பி.எம்.மின் துரோகப் பாதையை எதிர்த்து கலகம் செய்ததாகக் கூறிக் கொண்ட இவர்கள், புரட்சிகர சித்தாந்தத்தைப் பற்றி நிற்பார்கள் என்று எதிர்பார்த்தால் கடைசியில், புரட்டல்வாத சாக்கடையில் இன்னுமொரு புழு நெளியத் தொடங்கியிருக்கிறது.

● குமார்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இந்தப் படத்தைப் பார்க்கும் பொழுது இளைஞர்களும் சிறுவர்களும் கையில் கிடைத்ததைத் தூக்கிக் கொண்டு யாரையோ தாக்க ஓடுவது போல நம்மை எண்ண வைக்கும். உண்மையில் அவர்கள் யாரையும் தாக்க ஓடவில்லை; மாறாக, தங்களைத் தற்காத்துக் கொள்கிறார்கள். இருப்புப் பாதை ஓரமாக அமைந்திருக்கும் அவர்களின் வீடுகளில் இருந்து அவர்களைத் துரத்தியடிக்க வரும் கொல்கத்தா போலீசிடமிருந்து தற்காத்துக் கொள்ளத்தான் சிறுவர்கள்கூட கையில் கிடைத்ததைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்கள்.

''அவர்கள் ரெயில்வேக்குச் சொந்தமான இடத்தில் சட்டவிரோதமாகக் குடியிருக்கிறார்கள்; எனவே, அவர்களை அங்கிருந்து தூக்கி வீசி எறிய வேண்டும்'' என உத்தரவு போட்டது நீதிமன்றம். மேற்கு வங்கத்தை ஆளும் மார்க்சிஸ்டு கூட்டணி அரசோ, போலீசை அனுப்பி வைத்துத் தங்களின் ராஜ விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அபாயம் நிறைந்த இருப்புப் பாதைக்கு அருகே, ஓடும் ரெயில்களின் காதைக் கிழிக்கும் இரைச்சலுக்கு நடுவே, எந்த விதமான அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்வதை இவர்கள் மட்டும் விரும்புகிறார்களா என்ன? இவர்களின் உழைப்பை உறிஞ்சிக் கொண்டு, அழகு மிளிர பெருத்துக் கொண்டே போகும் கொல்கத்தா, இவர்கள் வாழ ஒரு ஓலை குடிசையைக் கூடப் போட்டுத் தருவது கிடையாது. இப்படி, இருப்புப் பாதை ஓரமாக, கழிவு நீர் ஓடும் கால்வாய்களுக்குப் பக்கத்தில், மேம்பாலங்களுக்கு அடியில் என மனிதன் வாழவே தகுதியில்லாத இடத்தில் அவர்கள் ஒதுங்கிக் கொண்டால், ஆக்கிரமிப்பு என அடித்துத் துரத்துகிறது ஆளுங் கும்பல்.



இதோ இந்தப் படத்தில் குவியலாகக் கொட்டிக் கிடக்கும் 500 ரூபாய் நோட்டு கட்டுக்கள் அனைத்தும் பஞ்சாப் அரசு தேர்வாணையத்தின் தலைவராக இருந்த ரவீந்தர் பால்சிங் சித்துவிடமிருந்து கைப்பற்றப்பட்ட இலஞ்சப் பணம். ''உயர் அரசு அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க தேர்வாணையம் நடத்தும் தேர்வின் வினாத்தாட்களைக் கடத்திக் கொண்டு போய் விற்பது; 'வேண்டப்பட்டவர்களின்' விடைத்தாள்களில் மதிப்பெண்ணைக் கூட்டிப் போடுவது; 'வேண்டப்பட்டவர்களுக்கு, நேர்முகத் தேர்வில் சாதகமாக நடந்து கொள்வது'' ஆகிய திருட்டு வழிகளின் மூலம் கடந்த ஆறே ஆண்டுகளில் சித்து அடித்த கொள்ளை நூறு கோடி ரூபாய் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், நீதிபதிகள் என்ற ஒரு கிரிமினல் கூட்டமே சித்துவின் கொள்ளைக்குப் பக்கபலமாக இருந்திருக்கிறது. சித்துவின் 'சித்து' விளையாட்டால் கிட்டதட்ட 3,500 பேர் பஞ்சாபில் உயர் அதிகாரிகளாக இருக்கிறார்கள். இதனால் கையும் களவுமாகப் பிடித்த பின்னும் சித்துவைத் தண்டித்து விட முடியுமா என்பதே கேள்விக் குறியாய் இருக்கிறது.

அதிகார வர்க்கத்தில் சித்து விதிவிலக்கல்ல; இதுதான் விதி. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், நீதிபதிகள், இராணுவத் தளபதிகள் போன்ற உயர் அதிகார வர்க்கக் கும்பல் அரசு கொடுக்கும் சம்பளத்தில் எப்படி செல்வச் சீமானைப் போல் வாழ முடிகிறது என்பதைத் துருவிப் பார்த்தால், நூற்றுக்கணக்கான சித்துகள் இருப்பதைக் கண்டு பிடிக்க முடியும்.

இரவு, பகல் பாராமல் எவ்வளவுதான் உழைத்தாலும், குந்தக் குடிசைகூட இல்லாமல் அகதிகளைப் போல வாழும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; மக்கள் ஊழியர்கள் என்ற போர்வையில் நாட்டின் செல்வம் அனைத்தையும் திருடித் தின்னும் அதிகார வர்க்கப் பெருச்சாளிகள் மறுபுறம். இந்த அநீதியை இனியுமா தொடர அனுமதிப்பது?

●○●